# இலங்கை

# பௌத்த, பாளி பல்கலைக்கழகம்

# 2011

# ஆண்டறிக்கை

# இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம்

## நோக்கு

உலகில் முதன்மையானதும் மிகச் சிறந்ததுமான பல்கலைக்கழகமாகத் திகழ்வது.

## பணிக்கூற்று

**(‘தம்மகக்கம் பவத்தேத்தும்’)**

பௌத்தத்திலும் பாளியிலும் தொடர்புடைய துறைகளிலும் அறிவைப் புகட்டுவதில் முதன்மை நிலையைச் சாதித்தலும் மாணவர்கள் ‘தம்ம’ பற்றியதும் தொடர்புடைய ஆற்றல்கள் பற்றியதுமான அறிவிலும் ஒழுக்கத்திலும் உயர்தரங்களை எட்டச்செய்தலும் புத்தர்பிரானின் போதனைகளுக்கு எடுத்துக்காட்டான ஒரு வாழ்க்கைமுறையை இலங்கையினுள்ளும் அதற்கு வெளியேயும் போற்றி வளர்த்தலும் பேணிப் பாதுகாத்தலும்.

## *உள்ளடக்கம்*


**பக்கம்**

சங்கைக்குரிய உபவேந்தரின் செய்தி 98 – 100

01. பொதுவானவை
- அறிமுகம்.......101
- குறிக்கோள்கள்.......102
- பல்கலைக்கழகத்தின் உத்தியோகத்தர்கள்.......102
- பல்கலைக்கழகப் பேரவை.......103
- பல்கலைக்கழக மேலவை.......104
- பீடச் சபைகள்.......105 - 106
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு.......107
- நிதிக் குழு.......107
- கொள்ளல் குழு.......108 - 109

02. பீடங்கள்.......110 – 113

03. ஆராய்ச்சியும் வெளியீடுகளும் (கல்விசார் பணியாளர்).......113 – 123

04. பரீட்சைகளும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களும்.......124 – 130

05. பரிசுகளும் புலமைப்பரிசில்களும்.......131 - 134

06. நூலக வசதிகள்.......134

07. நிருவாகச் செயற்பாடுகள்
- நிருவாகப் பணியாளர் மற்றும் உதவி நிருவாகப் பணியாளர் 135 - 137
- ஏழாட்டை விடுப்பு.......137
- கல்வி விடுப்பு (உள்நாட்டு, வெளிநாட்டு).......137
- வெளிநாட்டு விஜயங்கள்.......138
- நியமனங்கள் (கல்விசார், நிருவாக மற்றும் கல்விசாராத).......139
- பீடங்களுக்கான நியமனங்கள்.......139
- தற்காலிக/ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புகள்.......139 - 140

08. பணியாளர் பயிற்சி.......140 – 142

09. கொள்வனவு.......142

10. நிருமாணங்களும் வசதிகளுக்கான ஏற்பாடும்.......142 - 143

11. பயிலுநர்களைச் சேர்த்துக்கொள்ளல்.......143

12. மகாபொல புலமைப்பரிசில்கள்.......143

13. மாணவர் பேரவையினதும் மாணவர் பீடச் சங்கங்களினதும் அங்குரார்ப்பணம்.......143 - 144

14. உபகரணங்களின் பயன்பாடு.......144

15. நிதிச் செயற்பாடுகள்.......144 – 180

16. அட்டவணைகள்.......181 - 195

# சங்கைக்குரிய உபவேந்தரின் செய்தி

1995இன் 37ஆம் இலக்க இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழக (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான, 1981இன் 74ஆம் இலக்க இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகச் சட்டத்தின் நியதிகளின்படி 1982 ஏப்பிரல் 22ஆந் தேதியன்று தாபிக்கப்பட்ட இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம் அதன் மாணவர் கல்வி வளாகம் பிட்டிபன வடக்கு, கபடவத்த, ஹோமாகமவிலும், அதன் நிருவாகக் கட்டடம் 37, மொரகஹஹேன வீதி, பிட்டிபன, ஹோமாகமவிலும், வெளிவாரிப் பரீட்சைக் கிளை 214, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7இலும் அமைந்துள்ளனவாகச் செயற்படுகின்றது.

சுமார் 100 மாணவர்களுக்கு மட்டும் போதுமான விடுதி வசதிகள், ஏழு சிறிய விரிவுரை அறைகள் போன்ற குறைந்தபட்ச வசதிகளுடன் கல்விசார் செயல்முறை 1997, யூன் 9ஆந் தேதியன்று ஆரம்பிக்கப்பட்டது. ஒரு சிறிய நூலகமும் ஒரு சிறிய நிருவாகக் கட்டடமும் ஒருசில குறைபாடுகளுடன் அபிவிருத்தியடைந்த மட்டமொன்றுக்குத் தரமுயர்த்தப்பட்டன. மேல் மாகாண சபையிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட ஐந்து ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட ஒரு காணித்துண்டில் இரண்டு மாடி விரிவுரை அரங்குகள் ஐந்தும் மூன்று மாடி விடுதிகள் மூன்றும் சிற்றுண்டிச்சாலைகளும் நிருமாணிக்கப்பட்டு 2005 பெப்ருவரி 20ஆந் தேதியன்று திறந்துவைக்கப்பட்டன. புதிதாகக் கிடைக்கப்பெற்ற காணியில் மூன்று மாடி நூலகக் கட்டடமொன்றும் கேட்போர்கூடமொன்றும் பொது வசதிகளுக்கான கட்டடமொன்றும் நிருமாணிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன.

பிரதான நிருவாகக் கட்டடம் ஹைலெவல் வீதிக்கு அண்மையில் பிட்டிபன சந்திக்கு அருகிலுள்ள ஒரு காணித்துண்டில் நிருமாணிக்கப்பட்டு, மேற்படி கட்டடத்தொகுதியுடன் அவை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மேன்மைதங்கிய மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால், சமஸ்கிருதத்தில் புலமைவாய்ந்த கல்விமானும் ஆறு கீழைத்தேய மொழிகளில் நிபுணருமான சங். உபவேந்தர், அமரபுர சங்க சபாவின் அதி சங்கைக்குரிய பிரதம குரு, புகழ்பெற்ற எழுத்தாளர், ராஜ பண்டிதர், அதிசங்கைக்குரிய திவுள்தேன ஞானதிஸ்ஸ தேரோ அவர்களினதும், உயர் கல்வி அமைச்சர் கௌரவ எஸ்.பி. திசாநாயக்க அவர்களினதும், கல்வி அமைச்சர் கௌரவ பந்துல குணவர்தன அவர்களினதும் அத்துடன் துறவிகளையும் பொதுநிலையினரையும் கொண்டதான சிறப்புமிக்க கூட்டத்தினரதும் பங்குபற்றுதலுடன் 2010 ஆகஸ்ட் 12ஆந் தேதியன்று வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டன.

பெருந்தொகையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை இதன் எதிர்கால அபிவிருத்திக்குப் பேருதவியாக இருந்தது. எனவே பொது நிலையினரையும் துறவிகளையும் உள்ளடக்கிய 110 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்ட நிகழ்வு இங்கு பெருமகிழ்ச்சியுடன் குறிப்பிடப்படுகின்றது.

மாணவர்கள் மத்தியில் மன ஒழுக்கத்தை ஆழப் பதிய வைக்கும்பொருட்டுப் பொதுநிலை மாணவர்களுக்கும் துறவி மாணவர்களுக்கும் பௌத்த உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றினூடாக அறிமுகப்படுத்தப்பட்ட செயல்முறை சார்ந்த தியான நிகழ்ச்சித்திட்டமானது மாணவர் மத்தியில் பிரபல்யம் பெற்றுள்ளது. அதன் பெறுமதியையும் பயனையும் கவனத்திற்கொண்டு பீடச் சபைகளும்

மேலவையும் பேரவையும் அதனைக் கட்டாயமான கல்வி நிகழ்ச்சித்திட்டமாக்கத் தீர்மானித்தமை போற்றப்படவேண்டிய ஒரு நடவடிக்கை என்பதுடன் பெரிதும் பாராட்டவும்பட்டது. அதேமுறையில் பௌத்த உளவளத்துணையில் ஈராண்டு டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டமொன்றும் 2011ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டது.

இப்பல்கலைக்கழகம் தாபிக்கப்பட்டதன் குறிக்கோள்களை எய்தும்பொருட்டு மேன்மை தங்கிய முன்னாள் ஜனாதிபதியின் விசேட வேண்டுகோளின்பேரில் ஆங்கில மொழிமூலத்தில் தம்ம பற்றிய ஈராண்டுக்கான வெளிநாட்டுச் சமயப்பணி நிகழ்ச்சித் திட்டமொன்று நடத்தப்படுகின்றது. மாணவர்களின் ஆங்கில அறிவை முன்னேற்றுவதற்காக ஆங்கிலத்தில் சான்றிதழ் கல்விநெறியொன்றும் ஆங்கிலத்தில் டிப்ளோமா கல்வி நெறியொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கற்க விரும்புகின்ற மாணவர்களுக்கு வாய்ப்பொன்றை வழங்குவதற்காக ஆங்கில மொழித்துறையொன்று தாபிக்கப்பட்டுள்ளது.

ஆர்தர் சீ. கிளார்க் நிலையத்தின் உதவியுடன் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கற்பித்தல் - கற்றல் செயல்முறையை உள்நாட்டிலும் அதேபோன்று சர்வதேசரீதியாகவும் விரிவுபடுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வடிவமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள அதேவேளையில், ஒவ்வொரு கற்கைத் துறையையும் கணினிமயப்படுத்துவதற்கு அவசியமான திட்டங்கள் வகுக்கப்பட்டு அவை இப்போது பூர்த்தியடையும் நிலையிலுள்ளன.

பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாராப் பணியாளருக்குப் பயிற்சியளிப்பதற்கு ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், உபவேந்தரின் நிதியினூடாக மாணவருக்கும் பணியாளருக்கும் நலன்புரி நடவடிக்கைகளுக்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

கல்விசார் பணியாளரின் தொழில் வல்லமை அபிவிருத்தியின் பொருட்டு அவர்கள் மாதாந்த அடிப்படையில் ஆராய்ச்சிக் கட்டுரையொன்றைச் சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாராய்ச்சிக் கட்டுரைகளை "பாளி மற்றும் பௌத்த கற்கைகள்" என்ற வருடாந்த அறிவுச் சஞ்சிகையில் வெளியிடுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 2011ஆம் ஆண்டில் அத்தகைய 61 பணியாளர் அபிவிருத்தி அமர்வுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவென்று இங்கு குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

2005ஆம் ஆண்டு முதல் உள்ளக மாணவர்களின் நலனுக்காகக் கணினிப் பிரயோகங்களில் சான்றிதழ் கல்விநெறியொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக நவீன மொழிகளான ஜேர்மன், யப்பானியம், சீனம், ஹிந்தி, கொரியன் மற்றும் தமிழ் ஆகியவற்றில் மொழிச் சான்றிதழ் கல்விநெறிகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. மாணவர்களின் மிக உகந்த, உச்ச நன்மை கருதி எல்லாக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களும் 2011ஆம் ஆண்டிலிருந்து 2 ஆண்டு நிகழ்ச்சித்திட்டங்களாக்கப் பட்டுள்ளன. இத்தீவின் தூரப்புற மூலைகளிலிருந்து வந்துள்ள பிக்கு மாணவர்கள் தமது படிப்பு முடிந்தவுடன் தத்தமது "தாயக்கா"க்களுக்குத் திரும்பிச் செல்வர். அவர்களின் தேவைகளில் ஓர் அம்சம்தான் நல்ல நேரத்தைக் குறிக்கக்கூடுமாயிருத்தல். இதில் அவர்களுக்கு உதவும்பொருட்டும் தேவையான அறிவை வழங்கும்பொருட்டும் சோதிடத்தில் ஈராண்டு டிப்ளோமாவொன்றும் கட்டடக் கலையில் ஈராண்டு டிப்ளோமா வொன்றும் தொடங்கப்பட்டுள்ளன. 2011 முதல் 2016 வரைக்குமான ஐந்தாண்டுச் செயல்திட்டமொன்று வடிவமைக்கப்பட்டு இற்றைப்படுத்தப்படும் அதேவேளையில் செயற்படுத்தவும்படுகின்றது.

"புத்த ஜயந்தி"யை முன்னிட்டு பௌத்த சமயப்பணித் துறவிக்கு "தம்ம" தொடர்பாடலில் பயிற்சியளிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று சமய அலுவல்கள் அமைச்சின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சமய அலுவல்கள் மற்றும் நெறிமுறை அபிவிருத்தி அமைச்சின் உதவியுடன் புதிய கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இப்பல்கலைக்கழகத்தில் 182 வெளிநாட்டு மாணவர்கள் தம்மைப் பதிவுசெய்து இப்போது படித்துக்கொண்டிருப்பதனாலும் இதனுடன் இணைந்த நிறுவனங்கள் சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, அவுஸ்திரியா, ஸ்கொட்லாந்து மற்றும் தென்கொரியா ஆகிய இடங்களில் அமைந்துள்ளதனாலும் இது ஒரு சர்வதேசப் பல்கலைக்கழகமாகியுள்ளதென்ற உண்மையைக் குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். கல்விசார் பணியாளர் ஏழாட்டை விடுப்பில் இப்பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ள சிரேஷ்ட பேராசிரியர் எம்.டபிள்யு. விமல் விஜேரத்னவின் வழிகாட்டலின்கீழ் தூர்ந்துபோன புராதன பௌத்த கோயில்களுக்கு விஜயம்செய்து அவற்றைப் புத்தாய்வுசெய்து ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளனர். 2011ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்ட இப்பல்கலைக்கழகத்தின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுப் பண்டைய பாளித் தொடர் வரலாறான “தெலகட்டஹகதா” பதிக்கப்பெற்று அச்சிடப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைகள் கிளையால் பதினொரு வெளிவாரி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்படுகின்றன. அவை பௌத்தத்தில் டிப்ளோமா, பாளியில் டிப்ளோமா, பௌத்த தொடர்பாடலில் டிப்ளோமா, ஆங்கிலத்தில் டிப்ளோமா, வெளிநாட்டு பௌத்த சமயப்பணியில் பட்டப்பின் டிப்ளோமா, பௌத்த கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா, கலை இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம், கலை முதுமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தத்துவ முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் என்பவையாகும். மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உள்நாட்டில் 4617 மாணவர்களும் வெளிநாட்டு இணைந்த நிறுவனங்களூடாக 158 மாணவர்களும் தம்மைப் பதிவுசெய்து இந்நிகழ்ச்சித்திட்டங்களைக் கற்கின்றனர்.

உள்ளகக் கற்கை வசதிகளை விஸ்தரிக்கும்பொருட்டு ஹோமாகம வளவில் வெளிநாட்டு மாணவர்களுக்கான விடுதி வசதிகள், பரீட்சை மண்டபங்கள், தியானக்கூடங்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கான உறைவிடங்கள் என்பவற்றை எதிர்வரும் ஆண்டுகளில் நிருமாணிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் இந்தியா, அவுஸ்திரேலியா, யப்பான் மற்றும் அமெரிக்காவில் வெளிநாட்டு இணைந்த நிறுவனங்களைத் தாபிப்பதற்கான கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன. புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதன்மூலம் இந்தியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளுடன் மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களைத் தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. போலந்திலுள்ள வார்சோ பல்கலைக் கழகத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கையொப்பமிடுவதற்குத் திட்டமிடப்படுகின்றது.

எனவே வெவ்வேறு உபாயங்களின்மூலம் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் பௌத்தத்தில் புலமை சான்றவர்களை உருவாக்குவதன்மூலம் பௌத்தத்தினூடாக உலக மக்களுக்கு உதவும்பொருட்டு எமது பல்கலைக்கழகம் பௌதிக வளங்களிலும் மனித வளங்களிலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். எனவே, அதனைச் சாதிக்கும் கடப்பாட்டைக் கொண்டவர்களாக நாம் இருக்கவேண்டும்.

**சங். பேரா. இத்தாதெமலியே இந்தசார தேரோ**
**சங்கைக்குரிய உபவேந்தர்**

# 01. பொதுவானவை

## *(அ) அறிமுகம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1981ஆம் ஆண்டின் 74ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம், 214, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7இல், 1982 ஏப்பிரல் 22ஆந் தேதியன்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. பல்கலைக்கழகம் எய்துவதற்காகத் தாபிக்கப்பட்ட பிரதான குறிக்கோள்கள் புத்த தர்மத்தைப் பரப்புதலும், இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பௌத்த மற்றும் பாளிக் கற்கைகளை ஊக்குவித்தலும், பொருத்தமான துறைகளில் ஆராய்ச்சி நடத்துவதற்கான வசதிகளை வழங்குதலுமாகும்.

மேலே குறிப்பிட்ட சட்டம் 1995இன் 37ஆம் இலக்க இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழக (திருத்தச்) சட்டத்தின்மூலம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இத்திருத்தங்கள் செயற்படுத்தப்படுதலுக்கு ஒருங்கிசைவாக இதுகாலவரை உள்ளதாயிருந்த இணைக்கப்பட்ட உள்நாட்டு நிறுவனங்கள் இல்லாதொழிந்ததுடன் இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகமும் இலங்கையின் ஏனைய பல்கலைக் கழகங்களின் அமைப்புக்கிணங்க ஒழுங்கமைக்கப்பட்டது. இதன்விளைவாகப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைக் கிளையும் பட்டப்பின்படிப்பு நிறுவகமும் கொழும்பு வளவிலும் அதன் கல்விசார் வளாகமும் மாணவர் விடுதிகளும் பிட்டிபன, ஹோமாகமவிலும் அமையப்பெற்றன. அதன் நிருவாகக் கட்டடம் 2010 ஆகஸ்ட் 12ஆந் தேதியன்று 37, மொரகஹஹேன வீதி, பிட்டிப்பனையில் தாபிக்கப்பட்டது. இலங்கைப் பாராளுமன்றத்தின் உடைமையாகக் கொழும்பு 3, காலி வீதியில் இருந்த முன்னாள் சபாநாயகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான 'மும்தாஜ் மஹால்' 2009 மே 28ஆந் தேதியன்று இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகத்துக்கு உடைமை மாற்றப்பட்டது. இலங்கை பௌத்த, பாளி பல்கலைக் கழகத்தை எல்லா வசதிகளும் கொண்ட சர்வதேசப் பல்கலைக்கழகமொன்றின் தரத்துக்கு உயர்த்துவதற்குத் தேவையான அடிப்படை ஏற்பாடுகள் ஏற்கெனவே செய்யப்பட்டுள்ளன. பொதுநலவாய நாடுகளின் பல்கலைக்கழகச் சங்கத்தின் உறுப்புரிமையை அது அனுபவிப்பதுடன் இந்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்களினதும் பணிப்பாளர்களினதும் குழுவின் (C.V.C.D.) ஒரு துணை உறுப்பினராயுமுள்ளது.

### *(ஆ) குறிக்கோள்கள்*

1995இன் 37ஆம் இலக்க இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழக (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க மீளமைக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு:-

(1) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பௌத்த சமயத்தைப் பரப்புவதற்கும் சமயப் பணியைத் தளராது தொடர்வதற்கும் பௌத்த கோட்பாடு மற்றும் கட்டுப்பாட்டு நெறிமுறை ஆகியவற்றில் புலமை உள்ளோர்களுக்குப் பயிற்சியளித்தல்.

(2) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பாளி மொழி, பௌத்த கலாசாரம் மற்றும் பௌத்த தத்துவம் ஆகியன பற்றிய கற்கையை மேம்படுத்துதலும் இக்கற்கைகளை நவீன உலகத்தின் போக்குகளுக்கு ஒத்தவாறு அபிவிருத்தி செய்தலும்.

(3) (அ) பிரிவேனாக்களிலும் பாடசாலைகளிலும் அதையொத்த நிறுவனங் களிலும் பௌத்தத்தையும் பாளி மொழியையும் கற்பிப்பதில் பிக்கு மாணவர்களுக்கும் பாமர மாணவர்களுக்கும் பயிற்சியளித்தல்;

(ஆ) நெறிமுறையில் சமய எண்ணங்கொண்ட வாழ்க்கைப் பாங்கையும் மன ஒழுக்கக் கட்டுப்பாட் டையும் பேணுவதற்கும் முன்னேற்றுவதற்கும் வசதிசெய்தல்;

(இ) மேலே கூறப்பட்டுள்ள எவையேனும் விடயங்களுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் குறைநிரப்புகின்ற வேறு ஏதேனும் கருமம்.

### *(இ) பல்கலைக்கழகத்தின் உத்தியோகத்தர்கள்*

அமரபுர மகா சங்க சபாவின் பிரதம மதகுருவான அதிசங்கைக்குரிய, ராஜபண்டிதர், தவுல்ஹேன ஞானிஸ்ஸர மகாநாயக்க தேரோ அவர்கள் பல்கலைக்கழகத்தின் வேந்தர் பதவியை வகிக்கின்றார். சங்கைக்குரிய பேராசிரியர் இத்ததெமலியே இந்தசார தேரோ பல்கலைக்கழகத்தின் உபவேந்தராகச் சேவையாற்றுகின்றார். பௌத்த கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியாக சங்கைக்குரிய வாவ்வே தம்மரக்கித்த தேரோ சேவையாற்று கின்ற அதேவேளையில் சங்கைக்குரிய பேராசிரியர் உத்துராவல தம்மரத்தன தேரோ மொழிக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியாகச் சேவையாற்றுகின்றார். திரு. ஆர்.ஏ. பியரத்ன பல்கலைக்கழகத்தின் பதிவாளராகக் கடமையாற்றுகின்றார். திருமதி சந்திரா கருணாரத்ன பல்கலைக்கழகத்தின் நூலகராகப் பணியாற்றுகின்றார். திருமதி பீ.பீ. பர்னாந்து நிதியாளராகச் செயற்படுகின்றார்.

## *(ஈ) பல்கலைக்கழகத்தின் அதிகாரசபை – பேரவை*

1. சங்கைக்குரிய உபவேந்தர் - சங். பேரா. இத்ததெமலியே இந்தசார தேரோ

2. பீடங்களின் பீடாதிபதிகள் :
   - மொழிக்கற்கைகள் பீடம் - சங். சிரே. பேரா. உத்துராவல தம்மரத்தன தேரோ
   - பௌத்த கற்கைகள் பீடம் - சங். பேரா. வாவ்வே தம்மரக்கித தேரோ

3. மேலவையிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள்:
   - சிரேஷ்ட விரிவுரையாளர் சங். பிட்டிகல விஜித தேரோ
   - பேரா. ஈ.ஏ. விக்கிரமசிங்க

4. பௌத்த அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அல்லது அவரின் நியமத்தர்:

   - திரு. எச்.ஜி.சி. ஹேரத் (செயலாளர்)

5. கல்வி அமைச்சின் செயலாளர் அல்லது அவரின் நியமத்தர்:

   - திரு. பியசேன ரணேபுர (மேலதிகச் செயலாளர்)

6. விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்:
   - சங். பேரா. தும்புள்ளே ஸ்ரீ சீலக்கந்த நாயக்க தேரோ
   - சங். பேரா. கொள்ளுப்பிட்டியே மகிந்த சங்கரக்கித்த தேரோ
   - சங். ராஜபண்டிதர் பலாங்கொட சோபித நாயக்க தேரோ
   - சங். ராஜபண்டிதர் திருக்குணாமலே ஆனந்த அநுநாயக்க தேரோ
   - சங். பானகல உபதிஸ்ஸ நாயக்க தேரோ
   - பேரா. ஆரியபால பெரேரா
   - திரு. எஸ். சி. மன்னபெரும
   - திரு. எம்.எஸ்.பி. றெலபணாவ (அரச வழக்கறிஞர்)

7. பேரவையின் செயலாளராக – திரு. ஆர்.ஏ. பியரத்ன, பதிவாளர்

பேரவைக் கூட்டங்கள் நடைபெற்ற சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை:

2011 சனவரி 25 முதல் 2011 திசெம்பர் 20 வரை 11 பேரவைக் கூட்டங்களும் இரண்டு விசேட பேரவைக் கூட்டங்களும் நடத்தப்பட்டன.

## மேலவை

01. சங்கைக்குரிய உபவேந்தர் - சங். பேரா. இத்ததெமலியே இந்தசார தேரோ

02. பீடங்களின் பீடாதிபதிகள்:

- மொழிக்கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி
  - சங். சிரே. பேரா. உத்துராவல தம்மரத்தன தேரோ
- பௌத்த கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி
  - சங். பேரா. வாவ்வே தம்மரக்கித தேரோ

03. கற்கைத் துறைகளின் தலைவர்கள்:

- சங். சிரே. பேரா. வேகம பியரத்தன தேரோ, 08.02.2011 முதல் (பாளித்துறைத் தலைவர்)
- சங். பேரா. கல்லேல்ல சுமணசிறி தேரோ (தலைவர், சமயக் கற்கைகள் மற்றும் ஒப்பீட்டுத் தத்துவத்துறை)
- சங். நெலுவே சுமனவங்ச தேரோ (தலைவர், சமஸ்கிருதத்துறை)
- சிரேஷ்ட விரிவுரையாளர் சங். பிட்டிகல விஜித தேரோ (தலைவர், பௌத்த தத்துவத்துறை)
- பேரா. ஈ.ஏ. விக்கிரமசிங்க (தலைவர், சிங்களம் மற்றும் நவீன மொழிகள் துறை)
- சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கே.ஏ.எஸ்.என். அமரசேகர, 08.02.2011 வரை (தலைவர், தொல்பொருளியல் துறை)
- பேரா. எச்.எம்.வை.வி.கே. ஹேரத், 08.03.2011 முதல் (தலைவர், தொல் பொருளியல் துறை)
- சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி எம்.ஏ.சி. முனசிங்க (தலைவர், பௌத்த கலாசாரத் துறை)

04. நூலகர் :
- திருமதி சந்திரா கருணாரத்ன, 13.06.2011 வரை
- செல்வி மனோரி சமரக்கோன், 14.06.2011 முதல்

05. பேராசிரியர் சங். அக்கிரியகல நந்த தேரோ

06. பீடச்சபைகளின் பிரதிநிதிகள்:

- மொழிக் கற்கைகள் பீடம்: சங். துணைப் பேரா. துணுக்கேவத்தே குணரத்தன தேரோ
- பௌத்த கற்கைகள் பீடம்: சிரே. விரிவுரையாளர் திருமதி எச்.எம்.வை.வீ.கே. ஹேரத்

07. பேரவையால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்:
- சங். பேரா. தலல்லே தம்மரத்தன தேரோ
- சங். கலா. மாகம்மான பண்ணானந்த தேரோ
- சங். கலா. மதவாச்சியே தம்மஜோதி தேரோ
- பேரா. திரு. உடித்த கறுசிங்க
- சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. கே.ஏ. வீரசேன

08. மேலவையின் செயலாளர்: திரு. ஆர்.ஏ. பியரத்தன, பதிவாளர்

மேலவைக் கூட்டங்கள் நடைபெற்ற சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை:

2011 சனவரி 01 முதல் 2011 நவம்பர் 08 வரை 11 மேலவைக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

### *பீடச் சபைகள்*

திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஒவ்வொன்றும் பின்வருவோரைக் கொண்டதான இரு பீடச் சபைகள் தாபிக்கப்பட்டன:-

### *(அ) பௌத்த கற்கைகள் பீடம்*

1. பீடாதிபதி – சங். பேரா. வாவ்வே தம்மரக்கித தேரோ
2. சங். பேரா. அக்கிரியகல நந்த தேரோ
3. சங். பேரா. கல்லேல்ல சுமனசிறி தேரோ
4. சிரேஷ்ட விரிவுரையாளர் சங். பிட்டிகல விஜித தேரோ
5. சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி எச்.எம்.வை.வி.கே. ஹேரத்
6. சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கே.ஏ.எஸ்.என். அமரசேகர
7. விரிவுரையாளர் திருமதி எம்.ஏ.சி. முனசிங்க
8. விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) திரு. சமந்த இலங்கக்கோன்
9. விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) சங். அளுத்கம விமலரத்தன தேரோ
10. திருமதி டபிள்யு.பீ.எல்.எம். நிலுஷிகா

**பீடச் சபையின் மாணவப் பிரதிநிதிகள்**

1. சங். அஸ்மடலே தம்மரத்தன தேரோ
2. சங். குருவல சுசீல தேரோ

**நியமன உறுப்பினர்கள்:**

1. பேரா. தயா எதிரிசிங்க
2. சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. கருணாசேன ஹெட்டியாரச்சி
3. சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. கே.ஏ. வீரசேன

சங். போகமுவே தீராநந்த தேரோ, உதவிப் பதிவாளர், மாணவர் மற்றும் கல்விசார் அலுவல்கள், 2011 யூலை 27 வரை, பீடச் சபையின் செயலாளராகச் செயற்பட்டார். சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (நிருவாகம்) திரு. ஈ.ஏ. குணசேன 2011 ஆகஸ்ட் 24 முதல் இக்கடமைகளை நிறைவேற்றினார். 2011 சனவரி 01 முதல் 2011 திசெம்பர் 31 வரை பீடச்சபையின் பதினொரு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

### *(ஆ) மொழிக் கற்கைகள் பீடம்*

1. பீடாதிபதி – சிரேஷ்ட பேரா. சங். உத்துருவல தம்மரத்தன தேரோ
2. சங். பேரா. வேகம பியரத்தன தேரோ
3. சங். பேரா. நெலுவே சுமனவங்க தேரோ
4. பேரா. ஈ. ஏ. விக்கிரமசிங்க
5. துணைப் பேரா. சங். துணுக்கேவத்த குணரத்தன தேரோ
6. விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) - சங். மாவத்தகம பெம்மானந்த தேரோ
7. விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) - சங். மொரகொல்லாகம உபரத்தன தேரோ (2011 ஏப்பிரல் 06 முதல்)
8. திரு. எம்.எச்.பீ.கே. குணசேன
9. திரு. எஸ்.பீ. சமரவிக்கிரம - கணினிப் போதனாசிரியர்
   (2011 ஆகஸ்ட் 18 வரை)
10. விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) திருமதி வருணி தென்னக்கோன்

### *பீடச் சபையின் மாணவ பிரதிநிதிகள்*

1. சங். மடவல ஆரியரத்தன தேரோ
2. சங். கல்லேல்ல தம்மதின்ன தேரோ

### *வெளிவாரி உறுப்பினர்கள் (நியமிக்கப்பட்டோர்)*

1. பேரா. வால்டர் மாரசிங்க
2. கலா. சமன் சந்திர ரணசிங்க
3. சங். மதுருஓயே தம்மிஸ்ஸார தேரோ

சங். போகமுவே தீராநந்த தேரோ, உதவிப் பதிவாளர், மாணவர் மற்றும் கல்விசார் அலுவல்கள், 2011 யூலை 27 வரை பீடச் சபையின் செயலாளராகச் செயற்பட்டார். சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (நிருவாகம்), திரு. ஈ.ஏ. குணசேன 2011 ஆகஸ்ட் 24 முதல் அக்கடமைகளைப் புரிந்தார்.

2011 சனவரி 01 முதல் 2011 திசெம்பர் 31 வரை மொழிக் கற்கைகள் பீடத்தின் பீடச் சபையின் பதினொரு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

## *கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு*

1. திருமதி எஸ்.பீ.எம்.கே. சிறிவர்தன

   (தவிசாளர் - 2011 சனவரி 18இல் நடைபெற்ற 75ஆவது கூட்டத்துக்கு மட்டும்), பேரவையின் உறுப்பினர், பிரதம கணக்காளர் - உயர் கல்வி அமைச்சு

2. திரு. பீ. ரணேபுர

   (தவிசாளர் - 2011 பெப்ருவரி 15ஆந் தேதியிலிருந்து நடைபெற்ற 76ஆம், 77ஆம், 78ஆம் கூட்டங்களுக்கு), மேலதிகச் செயலாளர், உயர் கல்வி அமைச்சு

3. பேராசிரியர் ஆரியபால பெரேரா (உறுப்பினர்)
   பேரவையின் உறுப்பினர்

4. திரு. எஸ்.சி. மன்னப்பெரும (உறுப்பினர்)
   பேரவையின் உறுப்பினர்

5. திரு. ஆர்.ஏ. பியரத்ன (உறுப்பினர்)
   பதிவாளர்

6. திரு. ஜானக வெலிவட்ட (அவதானி)
   கணக்காய்வு அதிகாரி

7. திருமதி எச்.பீ. வீரசிங்க - கூட்ட ஏற்பாட்டாளர் – 75ஆம், 76ஆம், 77ஆம் கூட்டங்களுக்கு
   (உள்ளகக் கணக்காய்வு உதவியாளர்)

8. திரு. சி.ஜீ. கொத்தலாவல - கூட்ட ஏற்பாட்டாளர் – 78ஆவது கூட்டம்
   பதில் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்

2011இல் குழுவின் நான்கு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

## *நிதிக் குழு*

1. சங். பேரா. இத்ததெமலியே இந்தசார தேரோ (தவிசாளர்)
   சங்கைக்குரிய உபவேந்தர்
2. சிரே. பேரா. சங். உத்துராவல தம்மரத்தன தேரோ
   பீடாதிபதி, மொழிக் கற்கைகள் பீடம் (2011 ஒக்ரோபர் 17 வரை) (உறுப்பினர்)
3. திரு. பீ. ரணேபுர
   உதவிச் செயலாளர், உயர் கல்வி அமைச்சு – (உறுப்பினர்)
4. திரு. என்.எம்.டி. நவரத்ன
   பிரதிப் பணிப்பாளர், பொதுத் திறைசேரி – (உறுப்பினர்)
5. திரு. ஆர்.ஏ. பியரத்ன,
   பதிவாளர் - (உறுப்பினர்)
6. திருமதி பீ.பீ. பர்னாந்து
   நிதியாளர் – (செயலாளர்)

2011இல் நிதிக்குழுவின் 10 கூட்டங்கள் நடத்தப்பட்டன.

## *நிறுவனக் கொள்ளல் குழு மற்றும் சிறுதிறக் கொள்ளல் குழு – 2011*

### 1.1 நிறுவனக் கொள்ளல் குழு

1. சங். பேரா. இத்ததெமலியே இந்தசார தேரோ, — தவிசாளர்
   சங். உபவேந்தர்
2. திரு. ஆர்.ஏ. பியரத்ன — உறுப்பினர்
   பதிவாளர்
3. திருமதி எஸ்.பீ.எம்.கே. சிறிவர்தன — உறுப்பினர்
   பிரதம கணக்காளர் - உயர் கல்வி அமைச்சு
4. திரு. ஈ.ஏ. குணசேன — செயலாளர்
   சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (நிருவாகம்)

2011ஆம் ஆண்டில் நிறுவனக் கொள்ளல் குழுவின் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது.

### 1.2 சிறுதிறக் கொள்ளல் குழு

1. சிரே. பேரா. சங். உத்துராவல தம்மரத்தன தேரோ - பீடாதிபதி – (மொழிக் கற்கைகள் பீடம்) – உறுப்பினர்
2. திரு. ஆர்.ஏ. பியரத்ன – பதிவாளர் – (தவிசாளர்)
3. திருமதி பீ.பீ. பர்னாந்து – நிதியாளர் – (உறுப்பினர்)
4. திருமதி எச்.ஏ.பீ.பீ. கருணாரத்ன – உதவி நிதியாளர் – (செயலாளர்)
5. திரு. ஈ.ஏ. குணசேன – சிரேஷ்ட உதவிப் பதிவாளர் – (அதிதி உறுப்பினர்)
6. திருமதி ஜீ.ரி. கருணாதிலக – கட்டுமானப் பொறியியலாளர் – (அதிதி உறுப்பினர்)

2011ஆம் ஆண்டில் 11 சிறுதிறக் கொள்ளல் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

### கல்விசார்/கல்விசாராப் பணியாளரின் வீடமைப்புப் பற்றிய குழு

1. சங். பேரா. இத்ததெமலியே இந்தசார தேரோ (சங். உபவேந்தர்) – தவிசாளர்
   சங்கைக்குரிய உபவேந்தர்
2. சங். சிரே. பேரா. உத்துராவல தம்மரத்தன தேரோ – உறுப்பினர்
   பீடாதிபதி (மொழிக் கற்கைகள் பீடம்)
3. சங். பேரா. வாவ்வே தம்மரக்கித தேரோ – உறுப்பினர்
   பீடாதிபதி (பௌத்த கற்கைகள் பீடம்)
4. திரு. ஆர்.ஏ. பியரத்ன - பதிவாளர் – உறுப்பினர்
5. திரு. ஜீ. ஜயதிஸ்ஸ - பிரதிப் பதிவாளர் - செயலாளர்
6. திரு. ஈ.ஏ. குணசேன - சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (நிருவாகம்) – உறுப்பினர்

2011இல் கல்விசார்/கல்விசாராப் பணியாளரின் வீடமைப்புப் பற்றிய குழுக் கூட்டம் எதுவும் நடைபெறவில்லை.

### கல்விசார் பணியாளரின் கூட்டங்கள்

2011இல் கல்விசார் பணியாளரின் 07 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

### மாணவர் நலன்புரிக் குழு

2011இல் மாணவர் நலன்புரிக் குழுவின் இரண்டு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

மாணவர் மற்றும் கல்விசார் அலுவல்கள் உதவிப் பதிவாளர் சங். போகமுவே தீராநந்த தேரோ 2011 யூலை 27 வரை மேற்படி குழுவின் செயலாளராகச் செயற்பட்டார்.

### உயர் பட்டங்கள் குழு

1. சங். சிரே. பேரா. உத்துராவல தம்மரத்தன தேரோ
   - பீடாதிபதி, மொழிக் கற்கைகள் பீடம்
2. சங். பேரா. வாவ்வே தம்மரக்கித தேரோ - பீடாதிபதி, பௌத்த கற்கைகள் பீடம்
3. சங். பேரா. வேகம பியரத்தன தேரோ - தலைவர், பாளித்துறை
4. சங். பேரா. கல்லேல்ல சுமணசிறி தேரோ
   - தலைவர், சமயக் கற்கைகள், ஒப்பீட்டுத் தத்துவத்துறை
5. சங். பேரா. அக்கிரியகல நந்த தேரோ
6. சங். பேரா. நெலுவே சுமனவங்ச தேரோ
   - தலைவர், சமஸ்கிருதத் துறை மற்றும் பதில் தலைவர், ஆங்கிலத்துறை
7. பேரா. ஈ.ஏ. விக்கிரமசிங்க
   - தலைவர், சிங்களம் மற்றும் நவீன மொழிகள் துறை
8. சங். துணைப் பேரா. துணுக்கேவத்த குணரத்தன தேரோ
9. சிரே. விரி. சங். பிட்டிகல விஜித தேரோ - தலைவர், பௌத்த தத்துவத் துறை
10. பேராசிரியர் திருமதி எச்.எம்.வை.வி.கே. ஹேரத்
    - தலைவர், தொல்பொருளியல் துறை
11. சிரே. விரி. திருமதி எம்.ஏ.சி. முனசிங்க - தலைவர், பௌத்த கலாசாரத் துறை
12. பேராசிரியர் வால்டர் மாரசிங்க - வெளிவாரி உறுப்பினர்
13. பேராசிரியர் ஆரியபால பெரேரா - வெளிவாரி உறுப்பினர்,
14. பேராசிரியர் ராஜ் சோமதேவ - வெளிவாரி உறுப்பினர் (2011 மார்ச் வரை பணியாற்றிய பின்னர் பதவிவிலகினார்). பதிலீடாக பேரா. அனுர மனதுங்கவின் பெயர் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.
15. திரு. ஜீ. ஜயதிஸ்ஸ, பிரதிப் பதிவாளர் (பட்டப்பின் பட்டங்கள் மற்றும் வெளிவாரிப் பரீட்சைகள்) - குழுவின் செயலாளர்

2011 சனவரி 01 முதல் 2011 திசெம்பர் 31 வரை 11 கூட்டங்கள் நடத்தப்பட்டன.

### நிருவாக அலுவலர்களின் கூட்டங்கள்

மாதாந்தம் கூட்டப்படுகின்ற நிருவாக அலுவலர்களின் கூட்டங்களில் நிருவாக அலுவலர்களின் விடயங்களும் ஆலோசனைகளும் கலந்தாராயப்படுகின்றன. அவற்றுடன் துறைத் தலைவர்களின் தலைமையில் பணியாளர் கூட்டமும் நடத்தப் படுகின்றது.

2011இல் 07 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

# 02. பீடங்கள்

திருத்தப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், மீளமைப்பு நோக்கத்துக்காக சம்பளங்கள் மற்றும் ஊழியர்கோப்புக் குழுவினால் விதந்துரைக்கப்பட்டு, அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் ஊழியர்கோப்புக்கும், அங்கீகரிக்கப்பட்ட பாடத் திட்டங்களுக்கும் இணங்க, பௌத்த கல்விக்கான பௌத்த கற்கைகள் பீடம் மற்றும் மொழிக் கற்கைகளுக்கான மொழிக் கற்கைகள் பீடம் ஆகிய இரு பீடங்கள் தாபிக்கப்பட்டன.

### *பீடாதிபதிகள்*

(அ) பௌத்த கற்கைகள் பீடம்

- சங். பேரா. வாவ்வே தம்மரக்கித தேரோ (2009 யூன் 01 முதல் 2012 மே 31 வரை)

(ஆ) மொழிக் கற்கைகள் பீடம்

- சங். சிரே. பேரா. உத்துராவல தம்மரத்தன தேரோ (2011 செப்ரெம்பர் 26 முதல் 2014 செப்ரெம்பர் 25 வரை)

### *பௌத்த கற்கைகள் பீடம்*

பௌத்த கற்கைகள் பீடம் பின்வரும் நான்கு (4) கற்கைத் துறைகளைக் கொண்டுள்ளது:

I. பௌத்த தத்துவம்
II. பௌத்த கலாசாரம்
III. சமயக் கற்கைகளும் ஒப்பீட்டுத் தத்துவமும்
IV. தொல்பொருளியல்

பல்கலைக்கழகச் சட்டத்தின் குறிக்கோள்களை மேலும் வெற்றிகரமாக எய்தும்பொருட்டு பௌத்த கற்கைகள் பீடத்தின்கீழ் நான்கு புதிய கற்கைத் துறைகளைத் தாபிப்பதற்கான பிரேரணை முன்மொழியப்பட்டு, அதற்கு மேலவையாலும் பேரவையாலும் ஏற்கெனவே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2010 – 2015க்கான கூட்டுத் திட்டத்துக்கிணங்க மானுடவியல் என்ற புதிய பீடமொன்றைத் தாபிப்பதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது. ஆரம்பிக்கப்படுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட புதிய துறைகள் பின்வருமாறு:

I. உளவியல்
II. ஒழுக்கவியல்
III. மேலைத்தேயத் தத்துவம்
IV. சனசமூகத் தலைமைத்துவம்

இவற்றினுள் சனசமூகத் தலைமைத்துவமென்ற பாடத்துக்குப் பொருத்தமான பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு மேலவையிடமிருந்தும் பேரவையிடமிருந்தும் அதற்கான அங்கீகாரம் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது. அது கௌரவ அமைச்சரினதும் முகாமைக் குழுவினதும் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது. ஏனைய பாடங்களுக்கான பாடத்திட்டங்களைத் தயாரிப்பதற்குப் பேராசிரியர்களைக்கொண்ட குழுவொன்று ஏற்கெனவே நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவை இப்போது தயாரிக்கப்படுகின்றன.

### கற்கைத் துறைகளின் தலைவர்கள்

பௌத்த தத்துவம் -
சிரேஷ்ட விரிவுரையாளர் சங். பிட்டிகல விஜித தேரோ

பௌத்த கலாசாரம் -
சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி எம்.ஏ.சி. முனசிங்க

சமயக் கற்கைகளும் ஒப்பீட்டுத் தத்துவமும் -
சங். பேரா. கல்லேல்ல சுமணசிறி தேரோ

தொல்பொருளியல் -
சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கே.ஏ.எஸ்.என். அமரசேகர 2008 யூன் 05 முதல் 2011 யூன் 04 வரை

பேராசிரியர் திருமதி எச்.எம்.வை.வி.கே. ஹேரத் 2011 யூன் 05 முதல்

### ஏனைய கல்விசார் பணியாளர்

1. சங். பேரா. எக்கிரியகல நந்த தேரோ - பேராசிரியர்
2. திருமதி கே.ஏ.எஸ்.என். அமரசேகர - சிரேஷ்ட விரிவுரையாளர்
3. திரு. சமந்த இலங்கக்கோன் - விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)
4. சங். அளுத்கம விமலரத்தன தேரோ - விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)
5. திருமதி டபிள்யு.பீ.எல்.எம். நிலுஷிகா - போதனாசிரியர், பௌத்த உளவளத்துணை

### வருகைதரும் விரிவுரையாளர்கள்

| துறை (பாடங்கள்) | விரிவுரையாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| தொல்பொருளியல் | 10 |
| பௌத்த தத்துவம் | 12 |
| பௌத்த கலாசாரம் | 05 |
| சமயக் கற்கைகளும் ஒப்பீட்டுத் தத்துவமும் | 05 |

### மொழிக் கற்கைகள் பீடம்

மொழிக் கற்கைகள் பீடம் பின்வரும் நான்கு கற்கைத்துறைகளையும் இரண்டு அலகுகளையும் கொண்டுள்ளது:-

i. சிங்களம் மற்றும் நவீன மொழிகளின் துறை
ii. சமஸ்கிருதத் துறை
iii. பாளித் துறை
iv. ஆங்கிலத் துறை
v. ஆங்கிலமொழி கற்பித்தல் அலகு (ELTU)
vi. கணினி அலகு

### *துறைகளின் தலைவர்கள்*

1. பாளித் துறை
    - சங். சிரே. பேரா. உத்துராவல தம்மரத்தன தேரோ 2010 யூன் 19 முதல் 2011 மே 02 வரை
    - சங். பேரா. வேகம பியரத்தன தேரோ 2011 மே 03 முதல்
2. சமஸ்கிருதத் துறை - சங். பேரா. நெலுவே சுமனவங்ச தேரோ
3. சிங்களம் மற்றும் நவீன மொழிகளின் கற்கைத்துறை - பேரா. ஈ.ஏ. விக்கிரமசிங்க
4. ஆங்கிலத் துறை - சங். பேரா. நெலுவே சுமனவங்ச தேரோ
5. ஆங்கிலமொழி கற்பித்தல் அலகு –
   விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) திரு. எம்.எச்.பீ.கே. குணசேன

### *ஏனைய கல்விசார் பணியாளர்*

1. துணைப் பேராசிரியர் சங். துணுக்கேவத்த குணரத்தன தேரோ
2. விரிவுரையாளர் சங். மாவத்தகம பேமானந்த தேரோ
3. விரிவுரையாளர் சங். மொரகொல்லாகம உபரத்தன தேரோ
4. விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) – சங். கோனதெனிய பஞ்ஞரத்தன தேரோ – 2011 சனவரி 03 முதல்
5. விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) திரு. ஆர்.கே.ஏ.என். ரத்னசிறி – 2011 ஒக்ரோபர் 03 வரை
6. விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) திரு. கே.ஜி. சுவர்ணானந்த
7. திரு. எஸ்.பீ. சமரவிக்கிரம - கணினிப் போதனாசிரியர் – 2011 ஆகஸ்ட் 18 வரை
8. விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) திருமதி ரி.எம்.டபிள்யு. தென்னக்கோன் - 2011 சனவரி 03 முதல்
9. விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) திருமதி நிபுனிகா சதமாலி டிலானி – 2011 பெப்ருவரி 01 முதல்

### *வருகைதரும் விரிவுரையாளர்கள்*

| துறைகள் (பாடங்கள்) | விரிவுரையாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| சமஸ்கிருதம் | 06 |
| பாளி | 05 |
| ஜேர்மன் மொழி | 01 |
| யப்பான் மொழி | 01 |
| தமிழ் | 01 |
| ஹிந்தி | 01 |
| சீன மொழி | 01 |
| கொரிய மொழி | 01 |

***ஆங்கிலமொழி கற்பித்தல் அலகு***

திரு.கே.ஜீ.சுவர்ணானந்த - ஆங்கிலப் போதனாசிரியர், தரம் (I)
திரு. ஆர்.கே.ஏ.என். ரத்னசிறி - ஆங்கிலப் போதனாசிரியர், தரம் (I)
திரு. எம்.எச்.பீ.கே.குணசேன - ஆங்கிலப் போதனாசிரியர், தரம் (II)

***கணினிப் போதனாசிரியர்***

திரு. எஸ்.பீ. சமரவிக்கிரம - கணினிப் போதனாசிரியர், தரம் (II)

***வருகைதரும் விரிவுரையாளர் நியமனங்கள் 2007 - 2011***

| பாடம் | 2007 | | 2008 | | 2009 | | 2010 | | 2011 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண். | மணித். | எண். | மணித். | எண். | மணித். | எண். | மணித். | எண். | மணித். |
| பௌத்த தத்துவம் | 10 | 1960 | 08 | 558 | 13 | 697 | 10 | 668 | 12 | 1386 |
| பௌத்த கலாசாரம் | 03 | 340 | | | 04 | 500 | 04 | 480 | 05 | 480 |
| சமஸ்கிருதம் | 03 | 480 | 02 | 300 | 03 | 570 | 02 | 480 | 06 | 1020 |
| பாளி | 06 | 1380 | 03 | 600 | 04 | 720 | 04 | 720 | 05 | 780 |
| தொல்பொருளியல் | | | 03 | 180 | 01 | 240 | 05 | 120 | 10 | 462 |
| சமயக் கற்கைகள், ஒப்பீட்டுத் தத்துவம் | | | 01 | 120 | 01 | 360 | | | 05 | 416 |
| ஜேர்மன் மொழி | | | 01 | 120 | 01 | 120 | 01 | 120 | 01 | 120 |
| யப்பானிய மொழி | | | | | | | 01 | 120 | 01 | 120 |
| கொரிய மொழி | | | 01 | 120 | 01 | 120 | 02 | 160 | 01 | 120 |
| தமிழ் | | | | | 01 | 120 | 01 | 120 | 01 | 120 |
| ஹிந்தி | | | | | 01 | 120 | 01 | 120 | 01 | 120 |
| சீன மொழி | | | | | 01 | 120 | 01 | 120 | 01 | 120 |
| **மொத்தம்** | **22** | **4100** | **19** | **1998** | **31** | **3687** | **32** | **3228** | **49** | **5264** |

## 03. கல்விசார் பணியாளரின் ஆராய்ச்சியும் வெளியீடுகளும்

***சங். பேரா. வாவ்வே தம்மரக்கித தேரோ***

**கல்விசார் கட்டுரைகள்**

1. பௌத்தத்தில் அறிவாதார முறையியல் அணுகுமுறை
2. மேலைத்தேய இறையுலகவாதமும் பௌத்தமும்
3. " மனிதன் பற்றிய பௌதிக விளக்கம்"

   " சரண" இலக்கியத்தொகுதி 4ஆவது பதிப்பு

   பதிப்பாசிரியர்: சங்கைக்குரிய மட்டிபதியே தம்மசிறி தேரோ, பிக்கு சங்கம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

*சங். பேரா. எக்கிரியகல நந்த தேரோ*

**கல்விசார் கட்டுரைகள்**

1. புத்தரின் முன் பௌத்த எண்ணக்கரு, சியாம் மஹா நிக்காயவின் ஊவா பிரிவு, 2011 "சம்புத்தத்வ ஜயந்தி" நினைவுக் கொண்டாட்ட இலக்கியத்தொகுதி.
2. "கதாவத்துபிறக்கிறணயே பரவாத பிரதிபாபனாய", "நிவன் மக" (நிர்வாணத்துக்கான வழி) 2011, அரசாங்க அச்சக பௌத்த சங்கத்தின் இலக்கியத்தொகுதி.
3. "சந்திரபிரபா" இலக்கியத்தொகுதி – சந்திர விக்கிரமகமகே நினைவு விழாப் பதிப்பு. இந்திய அனுபவரீதியான இரண்டு தத்துவ அணுகுமுறைகள் பற்றிய ஒரு விசாரணை.

*சங். பேரா. கல்லேல்ல சுமணசிறி தேரோ*

**கல்விசார் கட்டுரைகள்**

1. வெளியீடுகள்:- நிரந்தர சமாதானத்துக்கு உலகெங்கும் பௌத்தத்தின் பிரயோகத்தன்மை. சமயங்களுக்கிடையிலான விழா - 2011, சமாதானத்துக்கான சமயங்களின் இலங்கைக் கவுன்சில், மட்டக்களப்பு.
2. சமயப் பாரம்பரியம் பற்றிய விமர்சனம் தொடர்பில் பௌத்தத்தின் அணுகுமுறை எவ்வாறு இருக்கவேண்டும்? 2600 சம்புத்தத்வ ஜயந்தி" நினைவுக் கொண்டாட்ட இலக்கியத்தொகுதி, சியாம் மஹா நிக்காயவின் ஊவா பிரிவு 2011இன் உத்தேச சஞ்சிகையில் பிரசுரிக்கப்படவுள்ள ஒரு கட்டுரை.
3. பௌத்தத்தில், இந்துசமயத்தில், கிறிஸ்தவத்தில், மற்றும் இஸ்லாத்தில் நம்பிக்கை பற்றிய மாணவர்களின் ஒலி-ஒளிக் காட்சிப்படுத்தலை ஒழுங்கு செய்தல், கேட்போர்கூடம், இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம், 24 ஆகஸ்ட் 2011.
4. இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகத்தாலும் புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகத்தாலும் 2011 நவம்பர் 29 மற்றும் 2011 நவம்பர் 30ஆந் தேதிகளில் ஒழுங்குசெய்யப்பட்ட இருநாள் செயலமர்வில் பங்குபற்றியமை.
5. மே 04ஆம், 05ஆம் தேதிகளில் நடைபெற்ற இஸ்லாம் மற்றும் பௌத்த சமயங்களுக்கிடையிலான உரையாடலில் அதிதி அவதானிப்பாளராகப் பங்குபற்றியமை.
6. 'இலங்கையில் பௌத்தம் எதிர்நோக்குகின்ற சவால்கள் பற்றிய ஒரு சமூக-பொருளாதார ஆய்வு' என்ற தலைப்பில் திருமதி விமலா ஹேரத்தால் தத்துவக் கலாநிதிப் பட்டத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி முன்மொழிவுக்கு மேற்பார்வையாளராகக் கடமையாற்றியமை.
7. பொதுப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கான சமயக் கற்கைகளும் ஒப்பீட்டுத் தத்துவமும் என்ற பாடம் தொடர்பில் அரையாண்டு முறைமைக்கிணங்கப் பாடத் திட்டத்தைத் தயாரித்தமை.

### *சிரேஷ்ட விரிவுரையாளர் சங். பிட்டிகல விஜித தேரோ*

**கல்விசார் கட்டுரைகள்**

1. பௌத்த உளவியலின் தன்மை

   பௌத்த உளவியல் பற்றிய கட்டுரைகள், இலக்கியத்தொகுதி, மகாமித்தாவே பஞ்ஞரத்தன தேரோ, சமந்த இலங்கக்கோன், மாகதி, 2011.

2. ஆரம்பகால பௌத்தத்தில் அனுபவரீதியான போக்குகள்

   " வித்யோதய" சமய இலக்கியத்தொகுதி, சிரேஷ்ட பேராசிரியர் வேகம பியரத்தன தேரோ, வித்யோதய பிரிவேனாவின் பழைய மாணவர் சங்கம்.

3. தத்துவக் கலாநிதிப் பட்டம் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டமை.

### *பேராசிரியர் திருமதி எச்.எம்.வை.வி.கே. ஹேரத்*

**ஆராய்ச்சியும் வெளியீடுகளும்**

1. " பிலிக்கெம" கல்வெட்டு (88-96). " ஆர்ய விபூஷண" பேரா. அபய ஆரியசிங்க நினைவு விழாத் தொகுதி, களனிப் பல்கலைக்கழகத்தின் தொல்பொருளியல் துறையின் ஒரு வெளியீடு, கொடகே கம்பனி, கொழும்பு.

2. பௌத்த கோயில்களின் கட்டடப் பாங்கின் வரலாறும் இலங்கையின் புராதன கோயில்களின் கட்டடப் பாங்கும் (36 – 47) 2011, " சந்திரபிரபா" நன்மதிப்பின் பேரிலான பேரா. சந்திர விக்கிரமகமகே நினைவுவிழா இலக்கியத்தொகுதி, சுனேத்திரா மஹாதேவி பிரிவென் வித்யாயத்தனய, பெப்பிலியான.

3. புராதன இலங்கையில் சாய்ந்துபடுத்த நிலையிலுள்ள பௌத்த சிலைகள் பற்றிய ஒரு தொல்பொருளியல் ஆய்வு, 153-173, 2011, பௌத்த ஆய்வுகள், பௌத்த ஆய்வுகள் பற்றிய 6ஆவது தேசிய மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள், பாளி மற்றும் பௌத்த கற்கைத்துறை, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், நுகேகொட.

4. புத்தளத்திலுள்ள " சப்தஷைலகிரி" கோயில் பற்றிய ஒரு புத்தாய்வு அறிக்கை, 2011, பல்கலைக்கழக ஆராய்ச்சிக் கருத்திட்டம் (வெளியிடப்படாதது).

### *சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கே.ஏ.எஸ்.என். அமரசேகர*

**ஆராய்ச்சியும் வெளியீடுகளும்**

- பொலனறுவையின் பேரவை மண்டபத் தூண் எழுத்துப் பொறிப்பு
- இலங்கையில் புராதன மருத்துவ முறைமை

  } சங்கைக்குரிய தலஹாகம ஞானரத்தன பிதான நாயக்க தேரோவின் பிறந்தநாள் நினைவு விழா இலக்கியத்தொகுதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள்.

- பொலனறுவை யுகக் கட்டடக் கலையின் சிறப்பம்சங்களை விளக்கிக் காட்டுகின்ற கலைக் கட்டுமானங்கள் பற்றிய ஒரு சுருக்கமான ஆய்வு (சங். தம்மரத்தன நாயக்க தேரோவின் நினைவுவிழா இலக்கியத்தொகுதி)

- அனுராதபுரத்தின் மேற்குப் பக்கத் துறவி மடங்கள் (ஆராய்ச்சி வெளியீடு, அச்சில்)
- இலங்கையில் பிராமணிய யுகத்துக்கு முந்திய கல்வெட்டுப் பொறிப்புக்களின் அடையாளங்கள் (ஆராய்ச்சி வெளியீடு, அச்சில்)

### *சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி எம்.ஏ.சி. முனசிங்க*

**கல்விசார் கட்டுரைகள்**

1. பௌத்த சமூக நிறுவனங்கள் பற்றிய ஓர் ஆய்வு 2011 – முன்னுரை
2. சந்திரபிரபா 2011, " பௌத்த கலைகளின் அபிவிருத்திக்கு கனிஷ்க மன்னனின் பங்களிப்பு"

### *விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) திரு. சமந்த இலங்கக்கோன்*

**வெளியீடுகள்**

1. நூறு விவாதங்கள்
2. பௌத்த உளவியல் பற்றிய கட்டுரைகள் - பதிப்பாசிரியர்

**கல்விசார் கட்டுரைகள்**

1. வழக்கமான சிந்தனையும் மொழியியல் ரீதியான தெரிவிப்பும், தம்மவிச்சாய, அபயபூமி தபோவனய, கேகாலை.
2. PTSD தொடர்பில் பௌத்த உளவளத்துணை, பௌத்த உளவியல் பற்றிய கட்டுரைகள், மகதி நிறுவகம்
3. உள-உடல் பிரச்சினை; ஒரு பௌத்த அணுகுமுறை, பௌத்த உளவியல் பற்றிய கட்டுரைகள், மகதி நிறுவகம்.

**கல்விசார் சமர்ப்பிப்புகள்**

1. மனமுறிவும் அநத்த எண்ணக்கருவும்; ஓர் ஒப்பீட்டு ஆய்வு, ரோயல் ஏசியாரிக் சொசைட்டி, நான்காவது வருடாந்த ஆராய்ச்சிக் கருத்தரங்கு.
2. நான்குபிரிவு மாற்றுக்களின் அறிவாதார முறையியல் பெறுமதி, ரோயல் ஏசியாரிக் சொசைட்டி, நான்காவது வருடாந்த ஆராய்ச்சிக் கருத்தரங்கு.
3. மனித குளோனிங், ஒழுக்கவியலும் பௌத்தமும், பணியாளர் அபிவிருத்திச் செயலமர்வு, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம்.
4. மறைவான அனுபவம்; பௌத்த மற்றும் சு∴ப்பி கண்ணோட்டங்கள், சு∴ப்பி தொடர்பான சர்வதேசக் கருத்தரங்கு, போபால், இந்தியா.

**கல்விசார் சாதனைகள்**

தத்துவக் கலாநிதிப் பட்டத்துக்குப் பதிவுசெய்தமை, களனிப் பல்கலைக்கழகம், தலைப்பு; மனமுறிவு, விரக்தி மற்றும் அநத்த எண்ணக்கரு.

### *விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) சங். அளுத்கம விமலரத்தன தேரோ*

**ஆய்வுகளும் ஆராய்ச்சியும்**

1. கம்போடியாவில் தேவராஜ நம்பிக்கையிலிருந்து புத்தராஜ நம்பிக்கைக்கான நிலைமாற்றம் பற்றிய ஓர் ஆய்வு (அச்சில்).

2. பல்கலைக்கழகத் தகுதிகாண்நிலை விரிவுரையாளர்களுக்குக் கொழும்புப் பல்கலைக்கழகப் பணியாளர் அபிவிருத்தி நிலையத்தால் (SDC) நடத்தப்பட்ட CTHE கல்விநெறியைக் கற்றமையும் சான்றிதழைப் பெற்றமையும்.
3. இப்போது களனிப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்புப் பீடத்தால் நடத்தப்படும் ஈராண்டு முதுமாணி நிகழ்ச்சித்திட்டத்தைக் கற்கின்றமை.
4. பௌத்தத்தைப் பரப்புவதில் தாய் மன்னர்களின் பங்களிப்பு, பதிப்பாசிரியர்: வெலிமடகம குசலதம்ம தேரோ, தாய்லாந்தில் பௌத்த கலாசாரம் (அச்சில்).

***திருமதி டபிள்யு.பீ.எல்.எம். நிலு ஷிகா, பௌத்த உளவளத்துணைப் போதனாசிரியர்***

**வெளியீடுகள்**

1. இயல்புகடந்த உளவியல் (2009)
2. உளவளத்துணை உளவியல் (2009)
3. கைத்தொழில் உளவியல் (2009)

**கட்டுரைகள்**

1. உணர்ச்சிகள் பற்றிய ஒரு பௌத்த பொருள் விளக்கம், 2600 “ சம்புத்தத்வ ஜயந்தி” நினைவுக் கொண்டாட்ட இலக்கியத்தொகுதி, 2011, உயர்கல்வி அமைச்சு, 2011.
2. பௌத்த அடிப்படைப் போதனைகள் பற்றிய ஓர் உளவியல் பொருள் விளக்கம், வியத்துசுயாமய இலக்கியத்தொகுதி, 2009.
3. ஆளுமை பற்றிய ஓர் உளவியல் பகுப்பாய்வு, பாஸபிரபா, சமஸ்கிருதத்துறை, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம், 2009.
4. “ கற்றல் குறைபாடுகள்” , விதர்ஷன இலக்கியத்தொகுதி, 2011.

**சமர்ப்பிப்பு**

1. உளவியல் பிரச்சினைகளுக்கு இசைமூலம் சிகிச்சையளித்தல் (இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகத்தின் பணியாளர் அபிவிருத்திச் செயலமர்வு-2011).
2. இலங்கையில் ‘எய்ட்ஸ்’ நோயாளருக்கு உள-சமூக ஒத்துழைப்பின் பங்கு (இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகத்தின் பணியாளர் அபிவிருத்திச் செயலமர்வு-2010)

***சிரேஷ்ட பேராசிரியர் சங். உத்துராவல தம்மரத்தன தேரோ***

**வெளியீடுகள்**

- “ ஆனாபான சத்தி” தியான உத்திகள் - 2011
  எம்.டி. குணசேன அன்ட் கம்பனி லிமிரெட்

**ஆராய்ச்சிக் கட்டுரைகள்**

- 2600 " சம்புத்தத்வ ஜயந்தி" நினைவுக் கொண்டாட்ட இலக்கியத்தொகுதி– 2600" " சம்புத்தத்வ ஜயந்தி" யும் புத்தர்பிரானின் வழிகாட்டலும்.
- " நிர்வாணய" – பௌத்தத்தில் பெயர்களினதும் வடிவங்களினதும் பகுப்பாய்வு – மனப்பாங்கும் எதார்த்தமும்
- " ஸ்ரீ கல்யாணி துருத்து" தம்மபோதனைகள் - 5
- " தஹம் உயன" (" தம்ம தோட்டம்" ) – வெளிப்பகட்டினால்தான் வருமானத்தை விடச் செலவினம் அதிகரிக்கின்றது.

**வகித்த பதவிகள்**

1. உபவேந்தர் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுதல்.
   2011.02.24 – 2011.02.25
   2011.04.05 – 2011.04.09
   2011.09.13 – 2011.09.15
   2011.12.25 – 2011.12.30
2. பீடாதிபதி (மொழிக் கற்கைகள் பீடம்) – 2011
3. சீனமொழிக் கல்விநெறி இணைப்பாளர் – 2011
4. " தஹம் சரசவிய" பௌத்த டிப்ளோமா இணைப்பாளர் – 2011
5. பாளி டிப்ளோமா இணைப்பாளர் – 2011
6. ஆராய்ச்சிக் குழுத் தவிசாளர் – 2011
7. பௌத்த உசாத்துணை உறுப்பினர் – கல்வி அமைச்சு, 2011
8. கௌரவ தவிசாளர் – உளப்பயிற்சி அபிவிருத்தி, ஆராய்ச்சி நிலையம், களனி

***சங். பேரா. வேகம பியரத்தன தேரோ***

**கல்விசார் கட்டுரைகள்**

1. பாளி நிக்காய இலக்கியத்தில் " அலங்கார" வின் பயன்பாடு (ரம்படகல்ல மொனராகல விகாரையின் கு/வித்யாசாகர மஹா பிரிவேனவால் வெளியிடப் பட்ட " விது சயுர" இலக்கியத்தொகுதியில் பிரசுரிப்பதற்கு எழுதப்பட்டது).
2. ஏதார்த்த தத்துவமும் " துக்க" பற்றிய எண்ணக்கருவும் (" வெசக் சிறிசர" சமயத் தொகுதியில் பிரசுரிப்பதற்கு எழுதப்பட்டது).
3. மாத்துருபாஷாகத்த சங்யுத்தஷர" வின் பரிமாண வளர்ச்சியில் " உபயுக்த" பரிணாமவளர்ச்சி நிலைமைகள் (இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறையின் " சுரபானி" சங்கத்தால் வெளியிடப்பட்ட " பாஷபிரபா" இலக்கியத்தொகுதியில் பிரசுரிப்பதற்கு எழுதப்பட்டது).

4. “ சுத்த நிபாத” வில் “ உரக வர்கய” பற்றிய ஒரு பரிசீலனை (வித்யோதய” சமய இலக்கியத்தொகுதியில் 2011இல் பிரசுரிக்கப்பட்டது).

5. பாளி அரிச்சுவடியின் ஒழுங்கமைதி பற்றிய ஒரு பரிசீலனை (இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகத்தின் கல்விசார் பணியாளரால் வருடாந்தம் வெளியிடப்படும் பாளி மற்றும் பௌத்த கல்விசார் இலக்கியத்தொகுதியில் பிரசுரிப்பதற்கு 2011 யூலை 15ஆந் தேதியன்று எழுதப்பட்டது).

6. பாளியில் அவதானிக்கப்பட்ட சமகால மரபுத்தொடர்கள் (ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேரா. ஆரியபால பெரேராவுக்கான “ அபிஸ்துதி” தொகுதியில் பிரசுரிப்பதற்கு 2011 செப்ரெம்பர் 20ஆந் தேதியன்று எழுதப்பட்டது).

**வெளியீடுகள்**

7. மரபுரீதியான பாளி இலக்கணம் (பிரசுரிப்பதற்கான மஹரகம “ தரஞ்சி” அச்சகத்தாரிடம் 2011 நவம்பர் 20ஆந் தேதியன்று கொடுக்கப்பட்டது).

**இலக்கியத்தொகுதிகளைப் பதிப்பித்தல்**

8. “ வித்யோதய” சமய இலக்கியத்தொகுதி 2011 (உசாத்துணைப் பதிப்பாசிரியர்)
9. “ வித்யோதய” 2011 (பதிப்பாசிரியர்)

### *சங். பேரா. நெலுவே சுமனவங்ச தேரோ*

1. சமஸ்கிருதத்துறை தொடர்பில் “ வித்யோதய” பிரிவேனவின் பங்களிப்பு. பக். 76-92, “ வித்யோதய” சமய இலக்கியத்தொகுதி (ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கல நாயக்க தேரோவின் நூற்றாண்டு (1872–2011) நினைவைக் கொண்டாடுகின்ற விசேட பதிப்பு. பதிப்பாசிரியர் சங். மாகுருப்பே தம்மானந்த தேரோ, சங். புஸ்ஸல்லாவே ஞானரத்தன தேரோ – “ வித்யோதய” பிரிவேனவின் பழைய மாணவர் சங்கம், கொழும்பு 10.

2. மனிதனின் நவீனகாலப் பிரச்சினைகளுக்குப் பௌத்தத் தீர்வுகள், பக். 75-82, “ சந்திரபிரபா” (நன்மதிப்பின்பேரிலான பேரா. சந்திர விக்கிரமகமகே நினைவு விழா இலக்கியத்தொகுதி – 2011).

3. சூதாடியின் புலம்பல், “ பாஷாபிரபா” பக். 64 – 69, 5ஆவது பதிப்பு – 2011, வருடாந்த இலக்கியத்தொகுதி. பதிப்பாசிரியர்: வக்கடவல விபுலசிறி தேரோ, மாவரலே சந்தின்திரிய தேரோ, “ சுரபாணி” சங்கம், சமஸ்கிருதத் துறை, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம்.

4. புத்தர் வார்த்தையின் வாய்மை உறுதிப்பாடும் இலட்சிய நிலையின் தன்மையும், பக். 94 – 120, “ பாரமி” அதிசங்கைக்குரிய கிஹிபியே விஜித நாயக்க தேரோ அபிஸ்தவ இலக்கியத்தொகுதி – 2011.

5. “ ததிசா சமன மம” சங்கைக்குரிய மாலேகொட நந்த நாயக்க தேரோ நினைவு விழா இலக்கியத்தொகுதி – 2011 (அச்சில்).

6. பெந்தர பிரிவின் கோயில் பெயர்களின் பட்டியல் - 2011 தெடியவல திலகசிறி தேரோ, நெலுவே சுமனவங்ச தேரோ ஆகியோரால் தயாரிக்கப்பட்டது.

***பேரா. திரு. ஈ.ஏ. விக்கிரமசிங்க***

1. கவித்துவ எண்ணக்கருக்களான குண, தோச மற்றும் ரிதி பற்றிய ஒரு பரிசீலனை – “ சரண” தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.

2. பௌத்தமும் சிங்கள இலக்கிய மரபும், 2600 “ சம்புத்தத்வ ஜயந்தி” நினைவுக் கொண்டாட்ட இலக்கியத்தொகுதி, உயர்கல்வி அமைச்சு, 2011 மே 17.

**வெளியீடுகள்**

1. சிங்களமொழியின் பேச்சுவழக்கு வகையும் கலாசாரப் பின்னணியும் – அச்சில்.
2. நவீன சிங்களக் கவிதை பற்றிய திறனாய்வு – அச்சில்.

***சங். துணைப் பேராசிரியர் துனுக்கேவத்த குணரத்தன தேரோ***

**ஆராய்ச்சி**

1. “ ஜாதகபாலிய” , “ ஜாதகஅட்டகத்தா” மற்றும் “ பன்சீய பணஸ் ஜாதக பொத்த”

2. சிங்கள இலக்கியப் படைப்புகளின் பரிசீலனை – 3 ஒரு புத்த பிக்குவால் காணப்பட்டவாறு புத்தர்பிரான்.

3. இவற்றைத் தவிர இப்போது “ பன்சீய பணஸ் ஜாதக பொத்தவினதும் அதனுடன் தொடர்புடைய தொகுதிகளினதும் அடிப்படையில் போதிசத்வ எண்ணக்கரு” என்ற தலைப்பின் அடிப்படையில் தத்துவக் கலாநிதிக்கான ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ளமை.

***சங். மொரகொல்லாகம உபரத்தன தேரோ - விரிவுரையாளர்***

1. பரியேசன சம்ரக்கனாவலி ஆராய்ச்சிக் கட்டுரைகள், சர்வதேச பாளி மாநாடு, 2011, பாளி மற்றும் பௌத்த கற்கைகள் பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகம், - “ மனறுலு சந்தேச ஊடாகப் பாளி மொழியின் அடையாளம்” (பொழிப்பும் முழுக் கட்டுரையும்).
2. சங்கைக்குரிய கொட்டியகல சந்தவிமல அவர்களைக் கௌரவிப்பதற்கான நிபான (நிர்வாணய) கட்டுரைகள், பதிப்பாசிரியர் கலா. கொட்டியகல உபரத்தன, 2011 “ நிர்வாணம் அடைவதற்கான ஒரு வழியாக தெலஸ் தூதங்க” .
3. “ ஞானபிரபா” , சங். கலா. பத்தேகம ஞானராம தேரோவைப் பாராட்டும் தொகுதி, பதிப்பாசிரியர் சபை: துணைப் பேராசிரியர் சங். கலா. ரணகமம சந்தவிமல, பேரா. அசங்க திலகரத்ன, பேரா. சந்திம விஜேபண்டார, சிங்கப்பூர், 2011. “ மனறுலு சந்தேசயவுக்கான ஓர் அறிமுகம்” .
4. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பாளி மற்றும் பௌத்த கற்கைகள் துறையும் புடிஸ்ற் ரைம்ஸ் டிரஸ்டும் ஒழுங்குசெய்த பௌத்த ஆய்வுகள் பற்றிய 7ஆவது வருடாந்த மாநாடு, 2011 திசெம்பர் 17ஆம், 18ஆந் தேதிகளில், “ பாளி மிலிந்தபன்ஹவினதும் அதன் சீன மொழிபெயர்ப்பினதும் ஓர் ஒப்பீட்டு ஆய்வு” .

5. தத்துவக் கலாநிதி, வூஹன் பல்கலைக்கழகம், சீன மக்கள் குடியரசு 2011, ஆய்வுக் கட்டுரைத் தலைப்பு – “ பாளி மிலிந்தபன்ஹ பற்றிய ஒரு திறனாய்வு.

***சங். மாவத்தகம பேமானந்த தேரோ – விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)***

1. ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கல அக்கியத்தயாத்திபுண்யகவாசய சத்குணொத்கர்ஷன் (சமஸ்கிருதத்தில்)

   " வித்யோதய" சமய இலக்கியத்தொகுதி – 2011, ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கல நாயக்க தேரோவின் நூற்றாண்டை (1911-2011) கொண்டாடுகின்ற விசேட பதிப்பு). " சன்ஸ்க" சங். மாக்குருப்பே தம்மானந்த தேரோ, சங். புஸ்ஸல்லாவே ஞானரத்தன தேரோ, " வித்யோதய" பிரிவேனவின் பழைய மாணவர் சங்கம், கொழும்பு 10, 2011 (பக். 26 – 27).

2. சமஸ்கிருதத்தை ஓர் இறந்த மொழியாகக் குறிப்பிடுவதன் பொருத்தமின்மை

   " பாஷாபிரபா" , 5ஆவது பதிப்பு – 2011, வருடாந்த இலக்கியத்தொகுதி, பதிப்பாசிரியர், சங். வக்கடவல விபுலசிறி தேரோ, சங். சந்திந்திரிய தேரோ, " சுரபானி" சங்கம், சமஸ்கிருதத்துறை, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம், 2011 (பக். 127 – 137).

3. சத்தர்சனேஷு சங்கியதர்ஷனஸ்ய பூர்விக (சமஸ்கிருதத்தில்)

   " பாஷாபிரபா" , 5ஆவது பதிப்பு – 2011, வருடாந்த இலக்கியத்தொகுதி, பதிப்பாசிரியர், சங். வக்கடவல விபுலசிறி தேரோ, சங். சந்திந்திரிய தேரோ, " சுரபானி" சங்கம், சமஸ்கிருதத்துறை, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம், 2011 (பக். 299 – 303).

4. மஹாயான புதிய தம்ம என்பவற்றுக்கு ஓர் அறிமுகம்

   " சரண" இலக்கியத்தொகுதி, 4ஆவது பதிப்பு, பதிப்பாசிரியர், சங். மட்டிபபியே தம்மசிறி தேரோ, சங். பத்தேகம சேகர தேரோ, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகப் பிக்கு சங்கம், கங்கொடவில, 2011 (அச்சில்).

5. சமஸ்கிருத பிராமண இலக்கியத்துக்கு ஓர் அறிமுகம்

   " வித்யாலங்கார" இலக்கியத்தொகுதி, வைதிக இல. 136ஆவது வித்யாலங்கார தினம், பதிப்பாசிரியர் சங்கைக்குரிய பலதொர இந்தஜோதி தேரோ, சங்கைக்குரிய போதவல பியபாரதி தேரோ, சங்கைக்குரிய வெலிமிட்டியாவே ஞானரத்தன தேரோ, " வித்யாலங்கார" பிரிவேன வெளியீடு, பேலியகொட, 2011 (பக். 193 – 206).

6. சமய ஆறுதலுடன் வாழ்க்கை

   " சாரத" இலக்கியத்தொகுதி, அகில இலங்கை " சசுன்மக" பிக்கு சபையின் 10ஆவது ஆண்டுவிழாப் பதிப்பு. பதிப்பாசிரியர் சங்கைக்குரிய மாவத்தகம பேமானந்த தேரோ, " சசுன்மக" வெளியீடுகள், தம்பதெனிய, 2011 (அச்சில்).

7. சமய விழுமியங்கள்

   " சாரத" இலக்கியத்தொகுதி, அகில இலங்கை " சசுன்மக" பிக்கு சபையின் 10ஆவது ஆண்டுவிழாப் பதிப்பு. பதிப்பாசிரியர் சங்கைக்குரிய மாவத்தகம பேமானந்த தேரோ, " சசுன்மக" வெளியீடுகள், தம்பதெனிய, 2011 (அச்சில்).

8. சமஸ்கிருத இலக்கணம்,

   மாநாட்டுக் கட்டுரை, சமஸ்கிருத மொழி வினாத்தாள், க.பொ.த. உ/த வினாத்தாள்-2011, உ/த பரீட்சைக் கருத்தரங்குத் தொடர், அஸ்கிரிய மஹா

பிரிவெனவின் பிரதம மதகுருவும் அஸ்கிரிய மஹா பிரிவெனவின் ஆசிரியப் பணியாளரும், கண்டி.

9. தொகுதி இணைப்பாளர்

   "பாஷாபிரபா", 5ஆவது தொகுதி – 2011, வருடாந்த இலக்கியத்தொகுதி, "சுரபானி" சங்கம், சமஸ்கிருத அலகு, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம், 2011.

10. வெவ்வேறு அரசாங்கப் பரீட்சைகள் தொடர்பில் மதிப்பீட்டுப் பணி

   கூட்டுக் கட்டுப்பாட்டாளர், பிரிவென இறுதிப் பரீட்சை – ஆரம்ப மட்டம் – 2011, பிரதம பரீட்சகர், பிரிவென இறுதிப் பரீட்சை – ஆரம்ப மட்டம் – 2011, கூட்டுக் கட்டுப்பாட்டாளர், பிராச்சீன பிராரம்ப பரீட்சை – 2011, பிரதம பரீட்சகர், பிராச்சீன, பிராரம்ப பரீட்சை – 2011, பரீட்சைத் திணைக்களம், பெலவத்த

11. வளப் பங்களிப்பு

   "சிரச" தொலைக்காட்சி, "தொலஸ்மசே ஹபஹன", "நெரஞ்சனா" தம்ம கலந்துரையாடல் நிகழ்ச்சி, 2011 யூலை 06ஆந் தேதி.

12. சஞ்சிகைகளின் வெளியீட்டு வைபவம் - சமஸ்கிருதத்தில் விரிவுரை

   "பாஷாபிரபா", 5ஆவது பதிப்பு – 2011, வருடாந்த இலக்கியத்தொகுதி, 2011 செப்ரெம்பர் 28ஆந் தேதியன்று நடைபெற்ற வெளியீட்டு வைபவத்தில், "சுரபானி" சங்கம், சமஸ்கிருத அலகு, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம்.

13. எமது பாரம்பரியக் கல்வி முறைமை

   விசேட அதிதி விரிவுரை, "சங்கராஜ பிரிவெனவின் வருடாந்தப் பரிசளிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் வைபவம் - 2011, 2011 ஒக்ரோபர் 21ஆந் தேதியன்று "சங்கராஜ" பிரிவென, மல்வத்து விகாரை, கண்டியில்.

***சங். கோனதெனியே பிரஞ்ஞாரத்தன தேரோ - விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)***

**கல்விசார் கட்டுரைகள்**

1. மனிதன் பற்றிய கருத்து – பௌத்த உளவியல் கட்டுரைகள் – மே 2011, பக். 37 – 43.
2. மொழியும் கருத்து வெளிப்படுத்தலும் பற்றிய பௌத்த கருத்து – "அனுதீபன" இலக்கியத்தொகுதி, நவம்பர் 2011, பக். 416 – 424.

**சர்வதேச கல்விசார் மாநாடுகளில் பங்குபற்றலும் கல்விசார் கட்டுரைகளைச் சமர்ப்பித்தலும்.**

1. சர்வதேச பௌத்த மாநாடு – 2011, சனவரி 8 – 10, தாய்லாந்து
   "கிம் மஹவங்ச ஸ்ரீ லங்கயம் மாஎதிகாச கந்தோ?" – பக். 154 – 160.

2. இலங்கை ரோயல் ஏசியாடிக் சொசைட்டி
4ஆவது ஆராய்ச்சி மாநாடு, 2011 மார்ச் 25 – 26.

3. சர்வதேச பாளி மாநாடு – 2011, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
'தத்தாகத்ததஸ்ஸ ஆயசங்ஸ்கார வஸ்ஸஜானம்" , பக். 43 – 44.

4. பௌத்த ஆய்வுகள் பற்றிய 7ஆவது வருடாந்தத் தேசிய மாநாடு, 2011 திசெம்பர் 17 – 18
" அபயகிரி துறவிமடம் ஒரு மஹாயான கல்விக்கூடமாக இருந்ததா?"

**வெளிவாரி விரிவுரைகள்**

1. இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகத்தின் முதுமாணி (MA) பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஒரு விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றமை.
2. " தம்ம" பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் ஒரு விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றமை – வத்தளை சாசனாரக்ஷக பலமண்டபய" .
3. 2011 க.பொ.த. உ/த பாளி பாடம் தொடர்பில் கருத்தரங்குகள் நடத்தியமை.
4. " பிராச்சீன பிராரம்ப" தொடர்புடைய கருத்தரங்குகளில் பாளி பாடம் தொடர்பில் விரிவுரைகள் நடத்தியமை, 2011 ஏப்பிரல் 06, " ஸ்ரீ லங்கா வித்யால பிரிவென" , மருதானை.

**செய்திப் பத்திரிகைக் கட்டுரைகள்**

புத்தர்பிரானின் நேர முகாமைத்துவம் - " லக்பிம" செய்திப் பத்திரிகை, 17 மே 2011

***செல்வி வருணி தென்னக்கோன் - விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)***

- ஆங்கில இலக்கியத்தினூடாக இரண்டாவது மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் (TESL)
- பிரிவென கல்வி முறைமையில் ஆங்கிலம் கற்பதற்குள்ள தடைகள்.
- ஆங்கில இலக்கியத்தினூடாக ஆங்கிலம் கற்பித்தலில் உள்ளீடு மற்றும் வெளியீடு ஆகிய எடுகோள்களின் பயன்: இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகத்திலுள்ள பிக்கு பட்ட மாணவர்களுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஓர் ஆராய்ச்சி.

***செல்வி நிபுனிகா திலானி - விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)***

- துறவிமடக் கல்விச் சூழமைவில் இரண்டாவது மொழிக் கற்றலுக்கான ஆர்.சி. கார்டினரின் திருத்திய சமூக – கல்வி மாதிரியை ஊக்குவித்தல்.

# 04. பரீட்சைகளும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களும்

## *I. முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாதல்*

**பழைய முறைமையின்கீழ்**

| | |
|---|---|
| முதலாம் தவணை | 2011 சனவரி 24 முதல் 2011 ஏப்பிரல் 01 வரை |
| இரண்டாம் தவணை | 2011 ஏப்பிரல் 25 முதல் 2011 யூலை 08 வரை |
| மூன்றாம் தவணை | 2011 யூலை 25 முதல் 2011 திசெம்பர் 02 வரை |

**அரையாண்டு முறைமையின்கீழ்**

| | |
|---|---|
| முதலாம் அரையாண்டு | 2011 சனவரி 24 முதல் 2011 யூலை 01 வரை |
| இரண்டாம் அரையாண்டு | 2011 யூலை 25 முதல் 2011 திசெம்பர் 02 வரை |

2011ஆம் கல்வியாண்டுக்கென 110 புதிய உள்நாட்டு மாணவர்களும் 48 வெளிநாட்டு மாணவர்களும் அனுமதிக்கப்பட்டனர். இரண்டாம் ஆண்டைச் சேர்ந்த 109 உள்நாட்டு மாணவர்களும் 45 வெளிநாட்டு மாணவர்களும், மூன்றாம் ஆண்டைச் சேர்ந்த 100 உள்நாட்டு மாணவர்களும் 74 வெளிநாட்டு மாணவர்களும், நான்காம் ஆண்டைச் சேர்ந்த 33 உள்நாட்டு மாணவர்களும் இக்காலப்பகுதியில் படித்துக்கொண்டிருந்தனர்.

| மாணவர் எண்ணிக்கையின் சுருக்கம் - 2011 | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1ஆம் ஆண்டு | | 2ஆம் ஆண்டு | | 3ஆம் ஆண்டு | | 4ஆம் ஆண்டு | |
| | உள் நாட்டு | வெளி நாட்டு | உள் நாட்டு | வெளி நாட்டு | உள் நாட்டு | வெளி நாட்டு | உள் நாட்டு | வெளி நாட்டு |
| பௌத்த கற்கைகள் பீடம் | 54 | 48 | 44 | 45 | 42 | 74 | 16 | - |
| மொழிக் கற்கைகள் பீடம் | 56 | - | 65 | - | 58 | - | 17 | - |
| மொத்த மாணவர் எண்ணிக்கை | 110 | 48 | 109 | 45 | 100 | 74 | 33 | - |
| | 158 | | 154 | | 174 | | 33 | |
| | 519 | | | | | | | |

## *II. பௌத்தத்தில்/பாளியில்/சமஸ்கிருதத்தில் டிப்புளோமா*

2011ஆம் ஆண்டில் பௌத்தத்தில் டிப்புளோமா கல்விநெறிக்கு 734 மாணவர்களும் (உள்நாட்டு 631, வெளிநாட்டு 103), பாளியில் டிப்புளோமா கல்விநெறிக்கு 54 மாணவர்களும் பதிவுசெய்திருந்தனர். ஒக்ரோபரில் நடத்தப்பட்ட இப்பரீட்சைகளின் பெறுபேறுகள் 2011 நவம்பரில் வெளியிடப்பட்டன. விவரம் பின்வருமாறு:

| கல்விநெறி | பதிவுசெய்த மாணவர்களின் எண்ணிக்கை | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பௌத்தத்தில் டிப்ளோமா | | | |
| உள்நாட்டு | 631 | 373 | 278 |
| மலேசியா | 17 | 05 | 05 |
| சிங்கப்பூர் | 55 | 22 | 21 |
| அவுஸ்திரியா | 30 | 20 | 15 |
| பாளியில் டிப்ளோமா | 54 | 16 | 08 |
| சமஸ்கிருதத்தில் டிப்ளோமா | 09 | - | - |
| மொத்த மாணவர் எண். | 796 | 436 | 327 |

2012ஆம் ஆண்டிலிருந்து பௌத்ததத்தில், பாளியில் மற்றும் சமஸ்கிருதத்தில் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்களுக்கு சிங்களத்தில்/ஆங்கிலத்தில் விரிவுரைகளை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

### *III. வெளிநாட்டு பௌத்த சமயப்பணிச் சேவைகளில் பட்ட நிகழ்ச்சித் திட்டம் (ஈராண்டுக் கல்விநெறி)*

2011இல் இக்கல்விநெறி நடத்தப்படவில்லை.

### *IV. ஆங்கிலத்தில் டிப்ளோமா 2010/2011*

இப்பரீட்சை 2011 செப்ரெம்பரில் நடத்தப்பட்டு அதன் பெறுபேறுகள் பின்வரும் முறையில் 2011 நவம்பர் 18ஆந் தேதியன்று வெளியிடப்பட்டன.

| கல்விநெறி | பதிவுசெய்த மாணவர்களின் எண்ணிக்கை | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அடிப்படைக் கல்விநெறி | 65 | 34 | 28 |
| சான்றிதழ் கல்விநெறி | 46 | 35 | 29 |
| டிப்ளோமா கல்விநெறி | 255 | 164 | 121 |
| மொத்த மாணவர் எண். | 366 | 233 | 178 |




### *ஆங்கிலத்தில் டிப்ளோமா 2011/2012*

2011/2012 ஆங்கிலத்தில் டிப்ளோமாவுக்குப் பின்வரும் முறையில் மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தனர். இதற்கான விரிவுரைகள் 2011 நவம்பர் 26ஆந் தேதியன்று ஆரம்பமாயின.

| கல்விநெறி | பதிவுசெய்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| அடிப்படைக் கல்விநெறி | 63 |
| சான்றிதழ் கல்விநெறி | 118 |
| டிப்ளோமா கல்விநெறி | 299 |
| மொத்த மாணவர் எண். | 480 |

## V. பௌத்தத்தில் "தகம் சரசவிய" டிப்ளோமா 2010/2011

இலங்கையிலுள்ள " தம்ம" பாடசாலைகளின் ஆசிரியர்களுக்காக பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் உதவியுடன் இப்பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் பௌத்தத்தில் " தஹம் சரசவிய" டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்துக்கு 2010ஆம் ஆண்டில் 2525 மாணவர்கள் பதிவுசெய்திருந்தனர். இப்பரீட்சை யூலை 17ஆம், 18ஆம், 19ஆந் தேதிகளில் நடத்தப்பட்டு, அதன் பெறுபேறுகள் 2011 ஆகஸ்ட் 02ஆந் தேதியன்று வெளியிடப்பட்டன. 1039 மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். அம்மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மஹரகம இளைஞர் சேவைகள் மன்றத்தின் கேட்போர்கூடத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட சான்றிதழ் வழங்கும் வைபவமொன்றில் வழங்கப்பட்டன. பிரதேச ரீதியாக இம்மாணவர்களின் செயல்நிறைவேற்றம் பின்வருமாறு:

| இல. | மாவட்டம் | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | தோல்வியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந்த மாணவர்களின் *HARAN Graph |
|---|---|---|---|---|---|
| 01 | கொழும்பு | 97 | 86 | 11 | 88.65% |
| 02 | கம்பஹ | 108 | 93 | 15 | 86.11% |
| 03 | களுத்துறை | 59 | 56 | 03 | 94.91% |
| 04 | காலி | 110 | 95 | 15 | 86.36% |
| 05 | மாத்தறை | 109 | 103 | 06 | 94.49% |
| 06 | ஹம்பாந்தோட்டை | 21 | 16 | 05 | 76.19% |
| 07 | இரத்தினபுரி | 76 | 66 | 10 | 86.84% |
| 08 | கேகாலை | 53 | 43 | 10 | 81.13% |
| 09 | கண்டி | 65 | 61 | 04 | 93.84% |
| 10 | மாத்தளை | 67 | 55 | 12 | 82.08% |
| 11 | நுவரெலியா | 21 | 21 | - | 100.00% |
| 12 | அனுராதபுரம் | 58 | 53 | 05 | 91.37% |
| 13 | பொலனறுவை | 54 | 47 | 07 | 87.03% |
| 14 | குருணாகல் | 99 | 87 | 12 | 87.87% |
| 15 | புத்தளம் | 47 | 39 | 08 | 82.97% |
| 16 | பதுளை | 61 | 54 | 07 | 88.52% |
| 17 | மொனறாகலை | 29 | 27 | 02 | 93.10% |
| 18 | அம்பாறை | 15 | 15 | - | 100.00% |
| 19 | திருகோணமலை | 24 | 22 | 02 | 91.66% |
| மொத்தம் | | 1173 | 1039 | 134 | 88.57% |




| | சித்தியடைந்தோர் | தோல்வியடைந்தோர் |
|---|---|---|
| சங்கைக்குரிய பிக்குகள் | 30 | 03 |
| " சில்மாதாக்கள்" | 06 | - |
| ஆண்கள் | 108 | 25 |
| பெண்கள் | 895 | 106 |
| மொத்தம் | 1039 | 134 |

| | | |
|---|---|---|
| கல்விநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கை | - | 2525 |
| பரீட்சைக்குப் பதிவுசெய்த மாணவர்களின் எண்ணிக்கை | - | 1597 |
| பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | - | 1173 |
| பரீட்சைக்குச் சமுகமளிக்காத மாணவர்களின் எண்ணிக்கை | - | 424 |
| பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | - | 1039 |
| பரீட்சையில் தோல்வியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | - | 134 |

## VI. *பௌத்த உளவளத்துணை பற்றிய கல்விநெறி*

பௌத்த உளவளத்துணையில் அடிப்படைக் கல்விநெறி, சான்றிதழ் கல்விநெறி மற்றும் டிப்ளோமா கல்விநெறி ஆகியவற்றை நடத்துவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கல்விநெறிகளை 2012 பெப்ருவரியில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## VII. கொரிய/சீன/தமிழ் மொழியில் டிப்ளோமா கல்விநெறிகள்

கொரிய, சீன மற்றும் தமிழ் மொழிகளில் அடிப்படை சான்றிதழ் கல்விநெறிகளையும் டிப்ளோமா கல்விநெறிகளையும் தொடங்குவதற்குப் பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இக்கல்விநெறிகளை 2012 மார்ச்சில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## VIII. பொதுக் கலைப் பட்ட (வெளிவாரிப்) பரீட்சை

2011இல் பொதுக் கலைப் பட்ட (வெளிவாரி) நிகழ்ச்சித்திட்டத்துக்கு 1597 மாணவர்கள் பதிவுசெய்திருந்தனர். பகுதி I பரீட்சைக்கு 815 மாணவர்களும், பகுதி II பரீட்சைக்கு 807 மாணவர்களும் பதிவுசெய்திருந்தனர்.

பகுதி Iக்கான கருத்தரங்குகள் 2011 யூன் முதல் ஆகஸ்ட் வரை நடத்தப்பட்டன. பகுதி IIக்கான கருத்தரங்குகள் 2011 ஆகஸ்ட் முதல் ஒக்ரோபர் வரை நடத்தப்பட்டன.

பகுதி I மற்றும் பகுதி II பரீட்சைகள் 2011 ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் நடத்தப்பட்டன. இப்பரீட்சைகளின் பெறுபேறுகளை 2012 மார்ச்சில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## IX. பொது/விசேட கலைப் பட்ட (உள்ளகப்) பரீட்சை

மேற்படி பரீட்சைகள் 2011 ஒக்ரோபர்/திசெம்பர் மாதங்களில் நடத்தப்பட்டன.

**பரீட்சையின் பெயர்**

பொதுக் கலை தகுதிபெறும் (பட்டப்) பரீட்சை – பகுதி II

பொதுக் கலைப் பட்டப் பரீட்சை (மறுமுறை தோற்றும் மாணவர்களுக்கு)

பொதுக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி I

பொதுக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி II

சிறப்புக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி I

சிறப்புக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி II

சிறப்புக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி III

மேற்படி பரீட்சைகளுக்கு இவ்வாண்டில் தோற்றிய மாணவர்களின் பரீட்சை விடைத்தாள்கள் இப்போதும் திருத்தப்படுவதனால் இப்பரீட்சைகளின் பெறுபேறுகள் காலக் கிரமத்தில் வெளியிடப்படவுள்ளன.

சிறப்புக் கலைப் பட்ட (உள்ளக) பரீட்சைகளுக்குப் பதிவுசெய்திருந்த மாணவர்களுக்கான பின்வரும் பரீட்சைகள் 2011 ஒக்ரோபர்/திசெம்பரில் நடத்தப்பட்டன.

**பரீட்சையின் பெயர்**

சிறப்புக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி I (பௌத்த தத்துவம்)
சிறப்புக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி I (பௌத்த கலாசாரம்)
சிறப்புக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி I (பாளி)
சிறப்புக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி I (தொல்பொருளியல்)
சிறப்புக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி I (சமஸ்கிருதம்)
சிறப்புக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி II (பௌத்த தத்துவம்)
சிறப்புக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி II (பௌத்த கலாசாரம்)
சிறப்புக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி II (பாளி)
சிறப்புக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி II (தொல்பொருளியல்)
சிறப்புக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி II (சமஸ்கிருதம்)
சிறப்புக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி III (பௌத்த தத்துவம்)
சிறப்புக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி III (பௌத்த கலாசாரம்)
சிறப்புக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி III (பாளி)
சிறப்புக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி III (தொல்பொருளியல்)
சிறப்புக் கலைப் பட்டப் பரீட்சை – பகுதி III (சமஸ்கிருதம்)

மேற்படி பரீட்சைகளின் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தப்படுவதற்கு அனுப்பப் பட்டுள்ளன. பெறுபேறுகள் காலக்கிரமத்தில் வெளியிடப்படும்.

2011 ஒக்ரோபர்Œதிசெம்பரில் வெவ்வேறு கல்விநெறிகளுக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | **கல்விநெறி** | **2011இல் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 01 | கணனி விஞ்ஞானத்தில் சான்றிதழ் கல்விநெறி | 40 |
| 02 | யப்பானிய மொழியில் சான்றிதழ் கல்விநெறி | 03 |
| 03 | ஹிந்தியில் சான்றிதழ் கல்விநெறி | காலக்கிரமத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளன. |
| 04 | சீன மொழியில் சான்றிதழ் கல்விநெறி | |
| 05 | கொரிய மொழியில் சான்றிதழ் கல்விநெறி | |
| 06 | பௌத்த உளவளத்துணை | |
| 07 | பௌத்த உளவளத்துணையில் டிப்ளோமா | 39 |
| 08 | ஆங்கிலத்தில் சான்றிதழ் கல்விநெறி | காலக்கிரமத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. |
| 09 | ஆங்கிலத்தில் உயர் சான்றிதழ் கல்விநெறி | பகுதி I மற்றும் பகுதி II பரீட்சைகள் நடத்தப்பட்டன. பகுதி III பரீட்சை காலக்கிரமத்தில் நடத்தப்படும். |

### *X. பௌத்த கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா கல்வி நிகழ்ச்சித்திட்டம்*

2011இல் பௌத்த கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா கல்விநெறிக்கு 24 மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்ததைத் தொடர்ந்து அதற்கான விரிவுரைகள் மார்ச் முதல் ஒக்ரோபர் வரை நடத்தப்பட்டன. 2011 திசெம்பரில் நடத்தப்பட்ட இறுதிப்பரீட்சையில் 9 மாணவர்கள் சித்தியடைந்தனர்.

### *XI. கலை முதுமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம்*

2011இல் கலை முதுமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கு 227 மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தனர். அவர்களுக்கான விரிவுரைகள் 2011 பெப்ருவரி முதல் ஒக்ரோபர் வரை நடத்தப்பட்டடன. 2011 திசெம்பரில் நடத்தப்பட்ட கலை முதுமாணிப் பட்டப் பரீட்சையில் 136 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.




### *XI. ஆராய்ச்சிமூலமான பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் (தத்துவ முதுமாணி/கலாநிதி)*

2011இல் தத்துவ முதுமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஐந்து மாணவர்களும் கலாநிதிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஒரு மாணவரும் பதிவுசெய்திருந்தனர்.

### *XII. பட்டமளிப்பு விழா*

பட்டமளிப்பு விழா ஈராண்டுகளுக்கொரு தடவை நடத்தப்படுவதனால் அது 2011 யூன் 10ஆந் தேதியன்று கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்டது.

# 05. பரிசுகளும் புலமைப்பரிசில்களும்

புலமைப்பரிசு விதிமுறைகளுக்கிணங்க வழங்கப்பட்ட புலமைப்பரிசுகளின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| | புலமைப்பரிசின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சங். உபவேந்தரின் பரிசு | 01 |
| 02 | எச்.எம். திசேரா நினைவுப் பரிசு | 01 |
| 03 | பீ. சுபசிங்க பரிசு | 01 |
| 04 | சங். களுகொடயாவே ஸ்ரீ பிரஞ்ஞசேகர நாயக்க தேரோ பரிசு | 01 |
| 05 | சங். பிம்புறே வாகீஸ்வர நாயக்க தேரோ பரிசு | 01 |
| 06 | மியுலின் லியனகே நினைவுப் பரிசு | 01 |
| 07 | அதி சங். சிறிமல்வத்தே ஆனந்த நாயக்க தேரோ பரிசு | 02 |
| 08 | கொரியாவின் சங். ஹேய் ஜோன் புலமைப்பரிசு | 03 |
| 09 | சங். பந்துரலியே ஜினராம பரிசு | 01 |
| 10 | சங். ஹீனட்டியான தம்மாலோக பரிசு | 01 |
| 11 | கும்புக்கே தொன் சனிஸ் அப்புஹாமி மற்றும் வன்னியாரச்சிலாகே ஜொஸ்தினா பொன்சேகா நினைவுப் பரிசு | 01 |
| 12 | பாளியில் காமினி ஜயசூரிய புலமைப்பரிசு | 03 |
| 13 | என். சோமிலாவதி பொல்கொடபிட்டிய நினைவுப் புலமைப்பரிசு | 02 |
| 14 | சேர் சிறில் டி சொய்ஸா நினைவுப் பரிசு | 03 |
| 15 | பிரான்சிஸ் ஹேவவிதான பரிசு | 01 |
| 16 | சங். கலா. தும்புள்ளே சீலக்கந்த நாயக்க தேரோ பரிசு | 01 |
| 17 | பாளிக்கான சங். திச் தியன் சொன் நினைவுவிழாப் பரிசு | 01 |
| 18 | பேரா. ஒலிவர் அபேநாயக்க பரிசு | 01 |
| 19 | சங். வெரல்லனே விமலதிஸ்ஸ நாயக்க தேரோ நினைவுப் பரிசு | 01 |
| 20 | பாளி இலக்கணத்துக்கு சங். அளுதெனியே பண்ணானந்த நாயக்க தேரோ நினைவுப் பரிசு | 02 |
| 21 | சங். வித்தாரன்தெனியே சந்திரஜோதி நாயக்க தேரோ நினைவுப் பரிசு | 03 |
| 22 | சமஸ்கிருதத்துக்கு சங். மொரட்டுவே சாசனரத்தன அநுநாஹிமி பரிசு | 01 |
| 23 | சங். பானகல உபதிஸ்ஸ நாயக்க தேரோ பரிசு | 01 |

## *பரிசுகளும் புலமைப்பரிசில்களும்*

**(பட்டப்பின்படிப்புப் பட்டங்கள் மற்றும் வெளிவாரிப் பரீட்சைகள் தொடர்பில்)**

புலமைப்பரிசு விதிமுறைகளுக்கிணங்க வழங்கப்படும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது:

| | புலமைப்பரிசின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பாத்திய தியஸ் தீரசேகர பரிசு | 01 |
| 02 | எச்.எஸ். குறே கலை முதுமாணிப் பட்டச் செயலாற்றுகைப் பரிசு | 01 |
| 03 | சங். சிரே. பேரா. உத்துராவல தம்மரத்தன நாயக்க தேரோ பரிசு | 01 |

புலமைப்பரிசில்களை வென்றவர்களுக்குப் பட்டமளிப்பின்போது புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன. 2011 பட்டமளிப்பின்போது பின்வரும் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன:

### *பௌத்த கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா*

**முகாந்திரம் எம்.ஜி. பெரேரா நினைவுப் புலமைப்பரிசு**

2007 – திரு. சுரேஷ் கொமிந்த ரணில் எதிரிசிங்க அபேநாயக்க (2007713)

2008 – அன்றதிகே அனோஜா தமயந்தி பெரேரா (2008707)

### *கலை முதுமாணி*

**1. கிரிவத்துடுவே ஸ்ரீ பன்னசார நாயக்க தேரோ பரிசு**

2007 – சங். கொஸ்வெட்டியே நந்தசிறி தேரோ (20078040)
ஜயமான்ன கங்காணம்கே ஜகத் நெல்சன் குலரத்ன (20078081)

2008 – சங். விலச்சியே காசியப்ப தேரோ (20088053)

**2. பாத்திய தியஸ் தீரசேகர பரிசு**

2007 – சங். ரத்மலானே ஆனந்த தேரோ (20078066)

2008 – சங். போகஹவவே ஹேமானந்த தேரோ (2008080)

**3. எச்.எஸ். குறே கலை முதுமாணிப் பட்டச் செயலாற்றுகைப் பரிசு**

சங். அளுயட்டவல தம்மிக தேரோ (20078037)

சங். சுவன்னசிறி

**2008**

சங். பிட்டிகல தம்மவினீத்த தேரோ (20088015)

சங். சிறிந்த (20088015)

சங். அஷின் அரிந்தம (20088068)

சங். போகஹவவே ஹேமானந்த (20088080)

## *பௌத்த கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமா - 2010*

**1. முகாந்திரம் எம்.ஜி. பெரேரா நினைவுப் புலமைப்பரிசு**

இப்பரிசு பௌத்த கற்கைகளில் பட்டப்பின் டிப்ளோமாவில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுகின்ற மாணவருக்கு வழங்கப்படுகின்றது.

2010719 சங். போகமுவே தீராநந்த தேரோ

## *கலை முதுமாணிப் பட்டங்கள் - 2009*

**1. கிரிவத்துடுவே ஸ்ரீ பன்னசார நாயக்க தேரோ பரிசு**

இப்பரிசு ஆரம்பகால பௌத்தம் - பிரச்சினைகளின் மீளாய்வு வினாத்தாளுக்கு ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுகின்ற மாணவருக்கு வழங்கப்படுகின்றது.

சங். மடுகஸ்தலாவே நந்த தேரோ (20098138)

சங். பரகம சுமண தேரோ (20098057)

**2. பாத்திய டயஸ் தீரசேகர பரிசு**

இப்பரிசு கலை முதுமாணிப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுகின்ற பிக்குவுக்கு வழங்கப்படுகின்றது.

சங். மாப்பலகம நந்தசிறி தேரோ (20098103)

**3. எச்.எஸ். குறே கலை முதுமாணிப் பட்டச் செயலாற்றுகைப் பரிசு**

இப்பரிசு பௌத்த சமூகத் தத்துவக் கோட்பாடுகளில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுகின்ற மாணவருக்கு வழங்கப்படுகின்றது.

சங். பனஹடுவே யசஸ்ஸி (20098071)

## *கலை முதுமாணிப் பட்டங்கள் - 2010*

**1. கிரிவத்துடுவே ஸ்ரீ பன்னசார நாயக்க தேரோ பரிசு**

இப்பரிசு ஆரம்பகால பௌத்தம் - பிரச்சினைகளின் மீளாய்வு வினாத்தாளுக்கு ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுகின்ற மாணவருக்கு வழங்கப்படுகின்றது.

ரணவீர ஆரச்சிலாகே பாகினி குமாரி ரணவீர (20098050)

**2. பாத்திய டயஸ் தீரசேகர பரிசு**

இப்பரிசு கலை முதுமாணிப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுகின்ற பிக்குவுக்கு வழங்கப்படுகின்றது.

சங். ஷாந்த ஷோபன (20108128)

**3. எச்.எஸ். குறே கலை முதுமாணிப் பட்டச் செயலாற்றுகைப் பரிசு**

இப்பரிசு பௌத்த சமூகத் தத்துவக் கோட்பாடுகளில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுகின்ற மாணவருக்கு வழங்கப்படுகின்றது.

சங். ஷாந்த ஷோபன (20108128)

*பௌத்தத்தில் "தஹம் சரசவிய" டிப்ளோமா - 2010*

**1. சங். சிரேஷ்ட பேரா. உத்துராவல தம்மரத்தன நாயக்க தேரோ பரிசு**

சங். சிரேஷ்ட பேரா. உத்துராவல தம்மரத்தன தேரோ அவர்கள் இப்புலமைப் பரிசைத் தொடக்கிவைத்துள்ளார். இப்புலமைப்பரிசு ஒவ்வோராண்டும் பௌத்தத்தில் " தஹம் சரசவிய" டிப்ளோமா பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுகின்ற மாணவருக்கு வழங்கப்படுகின்றது. ஒவ்வோராண்டும் பரிசின் பெறுமதியான ரூ. 5000/- காசுப் பரிசாக வழங்கப்படுகின்றது. முதலாம் இடத்தில் இரு மாணவர்கள் இருப்பார்களாயின் காசுப்பரிசு ரூ. 2500/-ஆகப் பகிரப்பட்டு வழங்கப்படுகின்றது.

இப்பரிசு பௌத்தத்தில் " தஹம் சரசவிய" டிப்ளோமா 2010இல் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவருக்கு வழங்கப்பட்டது.

இலந்தவர்ண ஹர்ஷா ஷிரோமினி (DB/DS/2010/0426)

## 06. நூலக வசதிகள்

**பணியாளர்**

| | |
|---|---|
| நூலகர் | 01 |
| உதவி நூலகர் | 01 |
| பொது உதவியாளர் (நூலகச் சேவை) | 02 |
| நூலக உதவியாளர் | 01 |
| நூலக உதவியாளர் (தற்காலிகம்) | 01 |
| நூலக கையாள் | 01 |
| இயந்திர இயக்குனர் | 01 |
| தொழிலாளி | 02 |

**நூலகத்தைப் பயன்படுத்திய வாசகர்களின் எண்ணிக்கை**

| | |
|---|---|
| பட்ட மாணவர் (பொதுக் கலைப் பட்டம்) | 430 |
| கல்விசார் பணியாளர் | 35 |
| கல்விசாராப் பணியாளர் | 75 |
| ஆராய்ச்சியாளர் | 25 |

**ஆண்டில் எய்தப்பட்டவை**

| | |
|---|---|
| கொள்வனவு செய்த நூல்களின் எண்ணிக்கை | 1047 |
| கொள்வனவுக்குச் செலவிட்ட பணம் | ரூ. 977,024.54 |
| நன்கொடையாகக் கிடைத்த நூல்கள்/சஞ்சிகைகள் | 117 |
| நன்கொடையின் பெறுமதி | ரூ. 24,771.00 |

**2011ஆம் ஆண்டில் சந்தாத்தொகை செலுத்தப்பட்ட சஞ்சிகை**

2011 யூலை முதல் 2012 யூலை வரை ஓராண்டுக்கு 'ரைம்' சஞ்சிகைக்கு சந்தாத்தொகை செலுத்தப்பட்டுள்ளது.

செலுத்திய சந்தாத்தொகை - ரூ. 10,206.00

# 07. நிருவாகப் பணியாளர்

| | பெயர் | பதவி |
|---|---|---|
| 01. | சங். கலா. இத்தாதெமலியே இந்தசார தேரோ | சங்கைக்குரிய உபவேந்தர் |
| 02. | திரு. ஆர்.ஏ. பியரத்ன | பதிவாளர் |
| 03. | திரு. ஜீ. ஜயதிஸ்ஸ | பிரதிப் பதிவாளர் |
| 04. | திரு. ஈ.ஏ. குணசேன | சிரேஷ்ட உதவிப் பதிவாளர் |
| 05. | திருமதி பீ.பீ. பர்னாந்து | நிதியாளர் |
| 06. | திருமதி எச்.ஏ.பீ.பீ. கருணாரத்ன | உதவி நிதியாளர் |
| 07. | திரு. என்.ஏ.எஸ்.கே. பிரேமச்சந்திர | உதவிப் பதிவாளர் |
| 08. | சங். பி. தீரானந்த தேரோ | உதவிப் பதிவாளர் (2009 ஆகஸ்ட் 24 முதல்) |
| 09. | செல்வி ஜி.ரி. கருணாதிலக | கட்டுமானப் பொறியியலாளர் |
| 10 | செல்வி மல்கா ஹேவாவித்தாரண | உதவிப் பதிவாளர் |

### உதவி நிருவாக ஆதரவுப் பணியாளர்

| | | |
|---|---|---|
| 01. | சங். என். யோகோனந்த தேரோ | துணை மேற்காப்பாளர் |
| 02. | திரு. காமினி சமரப்புலிகே | துணை மேற்காப்பாளர் |

2011ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புகள், பதவி உறுதிப்படுத்தல்கள், பதவி விலகல்கள், இளைப்பாறல்கள், மகப்பேற்று விடுப்புகள், சம்பளமற்ற விடுப்பு வழங்கல், வேலைத்தடைகள் மற்றும் தகுதி காண்நிலைக்கால நீடிப்புகள் என்பவை பின்வருமாறு:

### ஆட்சேர்ப்புகள்

| | பெயர் | பதவி | திகதி |
|---|---|---|---|
| 01. | செல்வி பீ.பீ. பர்னாந்து | நிதியாளர் | 03.01.2011 |
| 02. | செல்வி ஜி.ரி. கருணாதிலக | கட்டுமானப் பொறியியலாளர் | 03.02.2011 |
| 03. | செல்வி ஜே.எம். கயனி உதேஷிகா | எழுதுநர்(தரம் III) | 01.08.2011 |
| 04. | செல்வி ஏ.எம். சந்தியாகுமாரி அத்தபத்து | எழுதுநர்(தரம் III) | 01.08.2011 |
| 05. | செல்வி டபிள்யு.எம்.ஐ.பி.கே. விக்கிரமசிங்க | எழுதுநர்(தரம் III) | 01.09.2011 |
| 06. | செல்வி ஹேவாவித்தாரண | உதவிப் பதிவாளர் | 14.11.2011 |
| 07. | திரு. ஆர்.ஏ.ஐ.கே. ரணசிங்க | எழுதுநர்(தரம் III) | 01.11.2011 |
| 08. | திரு. எச்.எல். உதய ஜயநாத் | தொழிலாளி(தரம் III) | 01.11.2011 |

### பதவி உறுதிப்படுத்தல்கள்

| | | |
|---|---|---|
| 01. | திரு. டி. உடித்த மகேஷ் பர்னாந்து | தொழிலாளி(தரம் III) |
| 02. | திரு. டபிள்யு.எம். நயனபிரிய வீரசிங்க | தொழிலாளி(தரம் III) |

**பதவி விலகல்கள்**

| | பெயர் | பதவி | திகதி |
|---|---|---|---|
| 01. | செல்வி ஏ.எம். சந்தியாகுமாரி அத்தபத்து | எழுதுநர்(தரம் III) | 01.12.2011 |
| 02. | செல்வி டபிள்யு.எம்.ஐ.பி.கே. விக்கிரமசிங்க | எழுதுநர்(தரம் III) | 14.09.2011 |
| 03. | திரு. எம்.என்.ஏ. பீரிஸ் | வேலை மேற்பார்வையாளர்-சிவில் | 31.12.2011 |

**இளைப்பாறல்கள்**

2011ஆம் ஆண்டில் எவரும் சேவையிலிருந்து இளைப்பாறவில்லை.

**சேவையிலிருந்து விடுவிப்பு**

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு. எச்.டி. ரசிக கருணாரத்ன | உதவிப் பதிவாளர் | 03.01.2011 |

**மகப்பேற்று விடுப்பு**

2011ஆம் ஆண்டில் எவரும் மகப்பேற்று விடுப்பை எடுக்கவில்லை.

**சம்பளமற்ற விடுப்பு**

| | | | |
|---|---|---|---|
| 01. | எச்.டபிள்யு. நெல்சன் ஜயலத் | தொழிலாளி(தரம் III) | 09.01.2011 |

**வேலைத்தடை**

2011ஆம் ஆண்டில் எவரும் வேலைத்தடைக்கு உட்படவில்லை.

**தகுதிகாண்நிலைக் காலநீடிப்பு**

2011ஆம் ஆண்டில் எவரினதும் தகுதிகாண்நிலைக் காலம் நீடிக்கப்படவில்லை.

## 2011ஆம் ஆண்டில் பதவியுயர்வுகள்

***கல்விசார் பணியாளர்***

01. சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி எச்.எம்.வை.வி.கே. ஹேரத்

இவர் 2009 ஒக்ரோபர் 12ஆந் தேதியிலிருந்து செயற்படும்வகையில் பேராசிரியராகப் பதவியுயர்த்தப்பட்டார் (தொல்பொருளியல்துறை)

**சேவையிலிருந்து விடுவிப்பு**

2011ஆம் ஆண்டில் எவரும் சேவையிலிருந்து விடுவிக்கப்படவில்லை.

**பதவி விலகல்கள்**

***கல்விசார் பணியாளர்***

| | பெயர் | பதவி | திகதி |
|---|---|---|---|
| 01. | திரு. எஸ்.பீ. சமரவிக்கிரம | கணினி செய்முறை ஆசிரியர் (தரம் II) | 18.08.2011 |
| 02. | திரு. ஆர்.கே.ஏ.என். ரத்னசிறி | விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) | 03.10.2011 |

**கல்விசாராப் பணியாளர்**

கல்விசாராப் பணியாளர் தொகுதியைச் சேர்ந்த பின்வரும் ஆட்கள் இவ்வாண்டில் பதவியுயர்வுகளைப் பெற்றனர்.

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு. எம்.ஜி. ரவீந்திர தீபலால் | மின் தொழில்நுட்பவியலாளர் | 01.10.2008 |
| 02. | திரு. எம்.ஜி.எம். வீரதுங்க | தோட்டப் பணியர் | 14.08.2011 |
| 03. | திரு. விஜேரத்ன ஹெட்டியாரச்சி | இயந்திர இயக்குநர் | 14.08.2011 |
| 04. | திரு. நாமல் சமரசிங்க | இயந்திர இயக்குநர் | 14.08.2011 |
| 05. | திரு. கே.டி. உபுல் இந்திக | தொழிலாளி | 05.10.2009 |
| 06. | திரு. ஹசிதகுமார சமரப்புலிகே | தொழிலாளி | 04.08.2009 |
| 07. | திரு. விமல் ஜயசிங்க | தொழிலாளி | 04.08.2009 |
| 08. | திரு. டி.வி.என். சேனாரத்ன | தொழிலாளி | 15.12.2009 |

**ஏழாட்டை விடுப்பு**

| | | |
|---|---|---|
| 01. | சங். பேரா. வேகம பியரத்தன தேரோ | 01.02.2009 முதல் 01.02.2011 வரை |
| 02. | சங். பேரா. எக்கிரியகல நந்த தேரோ | 15.06.2009 முதல் 17.01.2011 வரை |
| 03. | சங். பேரா. கல்லேல்ல சுமணசிறி தேரோ | 22.07.2010 முதல் 11.04.2011 வரை |

**கல்வி விடுப்பு – வெளிநாட்டு**

01. சங். மொரகொல்லாகம உபரத்தன தேரோ (தகுதிகாண்நிலை விரிவுரையாளர்)

எடுக்கப்பட்ட வெளிநாட்டுக் கல்வி விடுப்பு முடிவடைந்துவிட்டதனால் 2011 யூலை 18ஆந் தேதியன்று வேலைக்கு அறிக்கையிட்டார்.

**கல்வி விடுப்பு – உள்நாட்டு**

இவ்வாண்டில் உள்நாட்டுக் கல்வி விடுப்பை எவரும் எடுக்கவில்லை.

**சேவை உறுதிப்படுத்தல்கள்**

01. சங். மொரகொல்லாகம உபரத்தன தேரோ (விரிவுரையாளர் தகுதிகாண்நிலை)

பேரவை 2011 ஏப்பிரல் 26ஆந் தேதிய அதன் கூட்டத்தில் இவரை 2005 சனவரி 03ஆந் தேதியிலிருந்து செயற்படும்வகையில் விரிவுரையாளர் பதவியில் உறுதிப்படுத்தியது.

## வெளிநாட்டு விஜயங்கள்

01. சங். பேரா. இத்தாதெமலியே இந்தசார தேரோ (சங்கைக்குரிய உபவேந்தர்)
24.02.2011 முதல் 25.02.2011 வரை (மரணச்சடங்கொன்றில் கலந்துகொள்வதற்கு சிங்கப்பூர் செல்வதற்கு)

02. சங். பேரா. இத்தாதெமலியே இந்தசார தேரோ (சங்கைக்குரிய உபவேந்தர்)
05.04.2011 முதல் 09.04.2011 வரை (இந்தியத் தூதரகம் ஊடாக வியட்நாமில் சர்வதேச மாநாடொன்றில் பங்குபற்றுவதற்கு)

03. பேரா. ஈ. ஏ. விக்கிரமசிங்க
09.08.2011 முதல் 20.08.2011 வரை (தனிப்பட்ட ஒரு தேவைக்காக நேபாளத்திலுள்ள மணிபால் மருத்துவக் கல்லூரிக்குச் செல்வதற்கு)

04. சங். பேரா. இத்தாதெமலியே இந்தசார தேரோ (சங்கைக்குரிய உபவேந்தர்)
13.09.2011 முதல் 15.09.2011 வரை (தாய்லாந்தில் மாநாடொன்றில் பங்குபற்றுவதற்கு)

05. சிரே. பேரா. உத்துராவல தம்மரத்தன தேரோ (சிரேஷ்ட பேராசிரியர்)
20.10.2011 முதல் 24.10.2011 வரை (இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்த சிங்கப்பூரிலுள்ள நிறுவகத்தில் பரீட்சைக் கடமைகளை மேற்கொள்வதற்கு)

06. சங். பேரா. நெலுவே சுமனவங்ச தேரோ (பேராசிரியர்)
20.10.2011 முதல் 26.10.2011 வரை (இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்த மலேசியாவிலுள்ள நிறுவகத்தில் பரீட்சைக் கடமைகளை மேற்கொள்வதற்கு)

07. சங். பேரா. இத்தாதெமலியே இந்தசார தேரோ (சங்கைக்குரிய உபவேந்தர்)
20.10.2011 முதல் 26.10.2011 வரை (இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்த அவுஸ்திரியாவிலுள்ள நிறுவகத்தில் பரீட்சைக் கடமைகளை மேற்கொள்வதற்கு)

08. திருமதி ரி.எம்.டபிள்யு.பீ. தென்னக்கோன் (விரிவுரையாளர் - தகுதிகாண்நிலை)
20.11.2011 முதல் 29.11.2011 வரை (தனிப்பட்ட ஒரு தேவைக்காக மலேசியா செல்வதற்கு)

09. சங். அளுத்கம விமலரத்தன தேரோ (விரிவுரையாளர் - தகுதிகாண்நிலை)
01.12.2011 முதல் 25.12.2011 வரை (இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்த சிங்கப்பூரிலுள்ள நிறுவகத்தில் பரீட்சைக் கடமைகளை மேற்கொள்வதற்கு)

10. திரு. சமந்த இலங்கக்கோன் (தகுதிகாண்நிலை விரிவுரையாளர்)
17.11.2011 முதல் 21.11.2011 வரை (இந்தியாவில் சுனி கோட்பாடு தொடர்பான சர்வதேச மாநாட்டில் பங்குபற்றுவதற்கு)

11. சங். பேரா. இத்தாதெமலியே இந்தசார தேரோ (சங்கைக்குரிய உபவேந்தர்)
(இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்த சிங்கப்பூரிலுள்ள நிறுவகத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் பங்குபற்றுவதற்கு)

## நியமனங்கள்

### கல்விசார் பணியாளர்

| | | | |
|---|---|---|---|
| 1. | சங். கோனதெனிய பஞ்ஞரத்தன தேரோ | விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) | 03.01.2011 |
| 2. | திருமதி ரி.எம்.டபிள்யு.பீ. தென்னக்கோன் | விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) | 03.01.2011 |
| 3. | திருமதி நிபுனிக்கா சதமாலி டிலானி | விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) | 01.02.2011 |
| 4. | செல்வி யு.ஜி.எம்.சி. மனோரி சமரக்கோன் | உதவி நூலகர் | 01.02.2011 |

### கல்விசாராப் பணியாளர் தற்காலிகம்

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வி ஜே.எம். கயனி உதேஷிகா | எழுதுநர் (தரம் III) | 07.02.2011 முதல் |
| 2. | திரு. பீ. நுவன் சமரசிங்க | தொழிலாளி (தரம் III) | 17.08.2011 முதல் |
| 3. | திரு. பீ.ஆர்.சி.எஸ். ஜயசுந்தர | எழுதுநர் (தரம் III) | 15.08.2011 முதல் |
| 4. | செல்வி எல்.எச்.வை. வசந்தி | எழுதுநர் (தரம் III) | 11.06.2011 முதல் |
| 5. | செல்வி டபிள்யு.ஏ. அனுராதா நதீஷா வேரகல | எழுதுநர் (தரம் III) | 15.11.2011 முதல் |
| 6. | திரு.பி.கே. புலஸ்திக சம்பத் ஜினதாச | நூலக உதவியாளர் (தரம் III) | 13.12.2011 முதல் |
| 7. | செல்வி ஜே.எச்.ஏ. ரோஷனி சமிந்திக ஜயசிங்க | கணினிப் பிரயோக உதவியாளர் (தரம் III) | 14.12.2011 முதல் |
| 8. | திரு. எச்.பீ.டி. முனேந்திர | தொழிலாளி (தரம் III) | 12.08.2011 முதல் |
| 9. | திரு. டி.டி. சிதந்த | தொழிலாளி (தரம் III) | 02.07.2011 முதல் |

## பீடங்களுக்கான நியமனங்கள்

சிரேஷ்ட பேராசிரியர் சங். உத்துராவல தம்மரத்தன தேரோ
26.09.2011 முதல் 25.09.2014

## தற்காலிக அடிப்படையில் கல்விசார் பணியாளரின் ஆட்சேர்ப்பு

### மொழிக் கற்கைகள் பீடம்

| *துறை (பாடம்)* | *விரிவுரையாளர்களின் எண்.* |
|---|---|
| பாளி | 02 |
| சிங்களம் | 01 |
| சமஸ்கிருதம் | 01 |

**பௌத்த கற்கைகள் பீடம்**

| *துறை (பாடம்)* | *விரிவுரையாளர்களின் எண்.* |
|---|---|
| பௌத்த தத்துவம் | 02 |
| பௌத்த கலாசாரம் | 02 |
| சமயக் கற்கைகள், ஒப்பீட்டுத் தத்துவம் | 02 |
| தொல்பொருளியல் | 02 |

# 08. பணியாளர் பயிற்சிகள்

### *கல்விசார் பணியாளரின் பணியாளர் அபிவிருத்திச் செயலமர்வுகள்*

2011ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகத்தின் கல்விசார் பணியாளர் பின்வருமாறு பயிற்சிநெறிகளுக்கு வழிப்படுத்தப்பட்டனர். எட்டு பணியாளர் அபிவிருத்திச் செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

| செயலமர்வு இல. | திகதி | விசேட வளப் பங்களிப்பு | தொனிப்பொருள் |
|---|---|---|---|
| 55 | 09.02.2011 | நிலந்த பீ. திசாநாயக்க விரிவுரையாளர் (தற்காலிகம்) | சமயங்களுக்கிடையில் நம்பிக்கைகள் தொடர்பில் இலங்கை பௌத்த சமூகம் எதிர்நோக்கும் சவால்கள் பற்றிய ஒரு பரிசீலனை |
| 56 | 09.03.2011 | திரு. கே.ஜி. சுவர்ணானந்த விரிவுரையாளர் (தற்காலிகம்) | எதுவாயிருக்கவேண்டும்: " ஒரு சிறிய கிணற்றில் பெரிய தவளையாகவா அல்லது ஒரு பெரிய கிணற்றில் சிறிய தவளையாகவா?" ஒரு நல்லாசிரியரின் பண்புகள் (ஓர் இருமொழிச் சமர்ப்பிப்பு) |
| 57 | 06.04.2011 | திரு. சமந்தா இலங்கக்கோன் விரிவுரையாளர் (தற்காலிகம்) | குளோனிங், ஒழுக்கவியல் மற்றும் பௌத்த சிந்தனை |
| 58 | 11.05.2011 | திரு. எச்.டபிள்யு.பி.ஐ. சம்பத் விரிவுரையாளர் (தற்காலிகம்) | ஆனந்த சமரக்கோன் இயற்றிய சிங்களப் பாடல்கள் பற்றிய ஓர் ஆய்வு |
| 59 | 08.06.2011 | திரு. எம்.எச்.பீ.கே. குணசேன விரிவுரையாளர் (தற்காலிகம்) | சமர்ப்பிப்புத் திறன்களை எவ்வாறு முன்னேற்றலாம்? |
| 60 | 17.08.2011 | சங். இலுக்கேவெல தம்மரத்தன தேரோ | தாயின் கருப்பையில் கருவுறும் திகதி |
| 61 | 07.09.2011 | சங். கட்டகடுவே சந்தவிமல தேரோ | தற்கொலை புரிதல்: ஒரு பௌத்த கண்ணோட்டம் |
| 62 | 20.10.2011 | திருமதி நிபுனிகா சதமாலி விரிவுரையாளர் (தற்காலிகம்) | ஆங்கிலம் கற்பதில் இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழக மாணவர்களின் செயலூக்கம் |

***பணியாளர் பயிற்சி***

2011ம் ஆண்டில் இப்பல்கலைக்கழகத்தின் கல்விசாராப் பணியாளர் பின்வருமாறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நோக்கி வழிநடத்தப்பட்டனர்.

கல்விசாராப் பணியாளருக்காக இந்நோக்கத்தின்பேரில் ரூ. 98,400/- செலவிடப்பட்டது. பங்குபற்றியவர்களின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளது:

| பெயரும் பதவிப்பெயரும் | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | கொடுப்பனவு | காலம் |
|---|---|---|---|
| திருமதி எச்.பீ. வீரசிங்க<br>உதவி உள்ளகக் கணக்காய்வாளர் | ஆங்கில டிப்ளோமா கல்விநெறி | ரூ. 8,800/- | |
| திரு. ஜே.டி. ஹப்புதந்திரி சாரதி (தரம் I) | வாகனங்களை அறிவியல் ரீதியாகப் பாதுகாப்பாகப் பயன்படுத்தல் | ரூ. 2,500/- | 30.07.2011 |
| திரு. எச்.ஏ. லால் ஜயரத்ன<br>சாரதி (தரம் I) | | ரூ. 2,500/- | 30.07.2011 |
| திரு. எச்.ஏ. நளின் பெரேரா<br>சாரதி (தரம் II) | | ரூ. 2,500/- | 30.07.2011 |
| திரு. பி.ஜி. சுமதிபால<br>சாரதி (தரம் II) | | ரூ. 2,500/- | 30.07.2011 |
| திரு. கலும் ஜயலத் த கொஸ்தா சாரதி (தரம் I) | | ரூ. 2,500/- | 30.07.2011 |
| திரு. பந்துல குமார<br>சாரதி (தரம் II) | | ரூ. 2,500/- | 30.07.2011 |
| திரு. ஆர்.ஏ. பியரத்ன<br>பதிவாளர் | தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அலுவலகத் தன்னியக்கம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | ரூ. 10,000/- | 08.08.2011<br>12.08.2011 |
| திருமதி ஜி.ரி. கருணாதிலக<br>கட்டுமானப் பொறியியலாளர் | பாரிய வாகனங்களைப் பயன்படுத்தலும் உற்பத்தித்திறனும் | ரூ. 2,500/- | 29.09.2011 |
| திரு. எம்.என்.ஏ. பீரிஸ்<br>வேலை மேற்பார்வையாளர்-சிவில் | | ரூ. 2,500/- | 29.09.2011 |
| திருமதி ஜி.ரி. கருணாதிலக<br>கட்டுமானப் பொறியியலாளர் | நீர்ப்பம்பியும் காற்றழுத்த இயந்திரப் பராமரிப்பும் | ரூ. 9,000/- | 18.10.2011<br>22.10.2011 |
| திரு. எம்.என்.ஏ. பீரிஸ்<br>வேலை மேற்பார்வையாளர்-சிவில் | | ரூ. 9,000/- | 18.10.2011<br>22.10.2011 |
| திரு. கே.ஏ.எல்.ஆர், பெரேரா<br>நீர்க்குழாய் பொருத்துனர் (தரம் I) | | ரூ. 9,000/- | 18.10.2011<br>22.10.2011 |

| | | | |
|---|---|---|---|
| திரு. கே.டி. உபுல் இந்திக<br>தொழிலாளி (தரம் III) | நீர்ப்பம்பியும் காற்றழுத்த இயந்திரப் பராமரிப்பும் | ரூ. 9,000/- | 18.10.2011<br>22.10.2011 |
| திரு. சிந்தக சமிந்த பீரிஸ்<br>தொழிலாளி (தரம் III) | | ரூ. 9,000/- | 18.10.2011<br>22.10.2011 |
| திரு. எச்.டி. பேமரத்ன<br>பதவிநிலை உதவியாளர் | புத்தகம் கட்டுதலும் ஆவணங்களைப் பேணிப் பாதுகாத்தலும் பற்றிய செயலமர்வு | ரூ. 2,000/- | 30.03.2011<br>31.03.2011 |
| திரு. ஜயவீர<br>நூலக உதவியாளர் | | ரூ. 2,000/- | 30.03.2011<br>31.03.2011 |
| திரு. சிந்தக சமிந்த பீரிஸ்<br>தொழிலாளி (தரம் III) | டீசல் ஜெனரேட்டர்களைப் பராமரித்தல் பற்றிய பயிற்சிநெறி | ரூ. 9,000/- | 05.12.2011<br>09.12.2011 |
| திருமதி பீ.பீ. பர்னாந்து<br>நிதியாளர் | 2012 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள் பற்றிய கருத்தரங்கு | ரூ. 800/- | 12.12.2011 |
| திருமதி எச்.ஏ.பீ.பீ. கருணாரத்ன | | ரூ. 800/- | 12.12.2011 |

## 09. கொள்வனவு

மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளல் -
பொருட்களினதும் உபகரணங்களினதும் கொள்வனவு – 2011 ரூ. 13,020,934.40

## 10. கொள்வனவு, நிருமாணங்கள் மற்றும் வசதிகளுக்கான ஏற்பாடு

2011ஆம் ஆண்டின்போது கொள்வனவு, நிருமாணம், அபிவிருத்தி மற்றும் வசதிகளை வழங்கல் ஆகிய நோக்கங்களுக்காகப் பின்வருமாறு நிதிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

**1. நிரந்தரச் சொத்துக்களின் அபிவிருத்தி**

1.1 கட்டடங்களின் புனரமைப்பும் நிருமாணமும் ரூ. 39,000,000.00

**2. நிலையான சொத்துக்கள் கையேற்பு**

2.1 தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் ரூ. 13,000,000.00

2.2 கட்டடங்களின் நிருமாணம் ரூ. 79,500,000.00

2.3 காணி மற்றும் காணி அபிவிருத்தி ரூ. 4,500,000.00

2.4 நூலகத்துக்குப் புத்தகங்கள் ரூ. 3,684,000.00

2.5 வாகனங்கள் ரூ. 20,500,000.00

2.6 இயந்திர உபகரணங்கள், சிறு உபகரணங்கள் ரூ. 1,000,000.00

ரூ. 161,184,000.00

2011ஆம் ஆண்டில் கட்டடங்களுக்கும் நிருமாணங்களுக்கும் - ரூ. 4,263,841.00

2011ஆம் ஆண்டில் நிறுத்திவைத்த நிதிகளின் விடுவிப்பு - ரூ. 587,921.19

**முழுதுமளாவிய முறைமையின்கீழ் கட்டடங்களின் நிருமாணம்**

கட்டட நிருமாணக் கருத்திட்டத்தின் நிருமாண வேலையில் 512 மில்லியன் ரூபா பெறுமதிக்கான 93.45% வேலை பொருத்தமான செயற்பாடுகளின் அடிப்படையில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. பிரதான நிருவாகக் கட்டடத்தின் 98% நிருமாண வேலை பூர்த்திசெய்யப்பட்டுள்ளபோதிலும் உத்தியோகபூர்வமாக அது கையளிக்கப்படவில்லை.

## 11. பயிலுநர்களைச் சேர்த்துக்கொள்ளல்

ஹோமாகம தொழில்நுட்பக் கல்லூரி, கம்பஹ தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் கணக்கீடு, செயலாளருக்கான செயல்முறை, கணினிப் பிரயோகங்கள் ஆகிய கல்விநெறிகளைப் பின்பற்றுகின்ற 06 ஆண், பெண் மாணவர்களுக்கும், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற, தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, லலித் அத்துலத்முதலி தொழிற்பயிற்சி நிறுவகம், இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் மற்றும் ஹோமாகமவிலுள்ள வலயக் கணினி வள நிலையம் ஆகியவற்றில் செயலாளருக்கான செயல்முறை மற்றும் கணினி தொடர்பான பயிற்சிநெறிகளைப் பின்பற்றுகின்ற 34 ஆண், பெண் மாணவர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டது.

## 12. மகாபொல புலமைப்பரிசில்கள்

2011ஆம் ஆண்டுக்கான மாணவர்களின் அனுமதியின்போது ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் அடிப்படையில் 67 பட்ட மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன. மேலும் மகாபொல புலமைப்பரிசில்கள் முறையே முதலாம் ஆண்டின் 22 மாணவர்களுக்கும், இரண்டாம் ஆண்டின் 21 மாணவர்களுக்கும், மூன்றாம் ஆண்டின் 16 மாணவர்களுக்கும், நான்காம் ஆண்டின் 8 மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன.

## 13. மாணவர் சங்கங்களையும் பீடச் சங்கங்களையும் தாபித்தல்

2011 பெப்ருவரி 22ஆந் தேதியன்று கூடிய மாணவர்களால் பின்வரும் பதவிவகிப்போர் 2011 பெப்ருவரி 22ஆந் தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதிக்கு நியமிக்கப்பட்டனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சங். பாணம ஆனந்த தேரோ | - | தலைவர் |
| 2. | சங். அஸ்மதலே தம்மரத்தன தேரோ | - | உப தலைவர் |
| 3. | சங். வைஜேரியே விமல தேரோ | - | செயலாளர் |
| 4. | திரு. ஹத்திரின்கே சுசந்த புஷ்பகுமார | - | கனிஷ்ட பொருளாளர் |
| 5. | சங். கத்தரகம மஹிந்த தேரோ | - | சஞ்சிகைப் பதிப்பாசிரியர் |
| 6. | சங். குருவல சுசீல தேரோ | - | சஞ்சிகைப் பதிப்பாசிரியர் |
| 7. | சங். நவதகல நாகித தேரோ | - | குழு உறுப்பினர் |
| 8. | சங். மடவல ஆரியரத்தன தேரோ | - | குழு உறுப்பினர் |

**பீடச் சபைகளுக்கு மாணவர் பிரதிநிதிகளின் நியமனம்**

**மொழிக் கற்கைகள் பீடம்**

01. சங். மடவல ஆரியரத்தன தேரோ
02. சங். கல்லால்லே தம்மதின்ன தேரோ

**பௌத்த கற்கைகள் பீடம்**

01. சங். அஸ்மதலே தம்மரத்தன தேரோ
02. சங். குருவல சுசீல தேரோ

# 14. உபகரணங்களின் பயன்பாடு

| உபகரணம் | உபகரண எண்ணிக்கை | எரிபொருள் நுகர்வு லீட்டரில் | மொத்தச் செலவினம் (ரூ.) | ஓட்ட மணித் தியாலம் | மணிக்கான செலவினம் | மணிக்கு எரிபொருள் நுகர்வு - லீட்டர் |
|---|---|---|---|---|---|---|
| மின்பிறப்பாக்கி | 01 | டீசல் 900 | 74,400.00 | 89 | 835.96 | 10.11 |
| புல்வெட்டும் இயந்திரம் | 03 | பெற்றோல் 135<br>2ரி 11<br>146 | 7,550.00<br>4,240.00<br>21,790 | 195 | 111.74 | 0.75 |
| கூட்டு மொத்தம் | 04 | 1046 | 96,190.00 | 284 | 947.70 | 10.86 |

# 15. நிதிச் செயற்பாடுகள்

2011ஆம் ஆண்டுக்கான மொத்த வருமானம் ரூ. 105,698,820.00 ஆக இருந்த அதே வேளையில், அரசாங்கத்தின் மீண்டுவருஞ் செலவின உதவுதொகை ரூ. 92,318,939.00 ஆகும். 2011இல் வெளிவாரி ஆராய்ச்சிக் கருத்திட்டங்களிலிருந்து ரூ. 6,928,175.00 செலவிடப்பட்டது. மொத்த மீண்டுவருஞ் செலவினம், நிரந்தரச் சொத்துக்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 40,240,200.00 தேய்மான ஒதுக்கீடு உட்பட ரூ. 167,070,369.00 ஆகும். இது கடந்த ஆண்டின் மொத்த மீண்டுவருஞ் செலவினமான ரூ. 135,008,700.00 உடன் ஒப்பிடுகையில் 23.75©HARAN Graph அதிகரிப்பாகும். அதற்கிணங்க இவ்வாண்டின் பற்றாக்குறையான ரூ. 61,546,736.00 பொதுத் திரட்டு நிதியில் பற்று வைக்கப்படுமாயின், 2011 திசெம்பர் 31இல் இருந்தவாறு பொதுத் திரட்டு நிதியத்தின் மீதி ரூ. 274,947,739.00 ஆகும்.

2011ஆம் ஆண்டுக்கான மூலதனச் செலவினத்துக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்த உதவுதொகை ரூ. 30,500,000.00 ஆகும். 2011ஆம் ஆண்டில் மூலதனச் செலவினமாக ரூ. 23,637,554.00 தொகை செலவிடப்பட்டுள்ளது.

# இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம்

## 2011 திசெம்பர் 31இல் இருந்தவாறு ஐந்தொகை

(கிட்டிய ரூபாயில் கணிக்கப்பட்டது)

| 2010 ரூ. | விவரம் | அட்டவணை இல. | 2011 ரூ. | 2011 ரூ. |
|---|---|---|---|---|
| | **சொத்துகள்** | | | |
| | **அசைவற்றவை** | | | |
| 529,461,004 | 1. நிலையான சொத்துகள் | 01 | 510,719,381 | |
| - | **2.** மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு, புதுப்பித்தல் | 02 | 3,527,542 | |
| 14,815,554 | **3.** முதலீடுகள் | 03 | 15,981,158 | |
| - | **4.** களஞ்சிய இருப்புக் கணக்கு - மூலதன | 04 | 564,000 | **530,792,081** |
| **544,276,558** | | | | |
| | **5. அசைவுள்ள சொத்துக்கள்** | | | |
| 383,450 | சேவை வைப்புகள் | 04 | 383,450 | |
| 1,113,234 | மூலதன முற்பணங்கள் | 05 | 1,228,473 | |
| 310,367 | முற்கொடுப்பனவுகள் | 06 | 373,632 | |
| 173,527 | அட்டுறு வட்டி | 07 | 161,832 | |
| 28,010 | பிணை வைப்புக்களின் முதலீடுகள் | - | 29,439 | |
| 420,486 | வெளியீடுகளின் இருப்பு | 08 | 420,486 | |
| 2,607,763 | பணியாளர் கடன்களும் நானாவித முற்பணங்களும் | 09 | 2,529,996 | |
| 781,114 | களஞ்சியங்களிலுள்ள இருப்பு மீதி | | 1,443,624 | |
| 7,500 | வாயு சிலிண்டர்களுக்கான வைப்பு | - | 7,500 | |
| 27,129,594 | வங்கி மீதி | 10 | 35,433,746 | |
| **32,955,045** | | | 42,012,178 | **42,012,178** |
| **577,231,603** | **மொத்தச் சொத்துக்கள்** | | | **572,804,259** |

| | | | | |
|---|---|---|---|---|
| | **6. மூலதனமும் பொறுப்புக்களும்** | | | |
| 733,404,735 | மூலதன உதவி | 11 | 765,105,258 | |
| | கடன்பெற்றோர் | | 564,000 | |
| 875,935 | வெளிவாரிக் கருத்திட்டம் - மூலதனம் | - | 999,299 | |
| 1,100,000 | பொது திரட்டுநிதியில் செலவிட்ட மூலதனச் செலவினம் | 12 | 1,100,000 | **767,768,557** |
| **735,380,670** | | | | |
| | **7. திரண்டவை** | | | |
| (213,401,003) | திரண்ட மீதி | - | (274,947,739) | |
| 3,179,996 | கணிப்பிட்ட சொத்துக்கள் | - | 3,419,996 | **(271,527,743)** |
| **(210,221,007)** | | | | |
| 16,345,305 | **8.** திரண்ட நிதிகள் | 13 | 17,851,774 | |
| 11,664,567 | **9.** மூலதன நன்கொடைகள் | 14 | 11,689,338 | |
| **-** | **10.** மிகைப்பாடுகளுக்கு ஏற்பாடு | - | 17,569,053 | **47,110,165** |
| **28,009,872** | | | | |
| | **11. நடப்புப் பொறுப்புக்கள்** | | | |
| 737,715 | வைப்புக்கள் | 15 | 617,143 | |
| 570,786 | நானாவிதக் கடன்பெற்றோர் | 16 | 207,052 | |
| 12,329,892 | ஒப்பந்தங்கள்மீது நிறுத்திவைத்தவை | 17 | 12,926,599 | |
| 10,423,675 | வெளிவாரி கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | 18 | 15,702,486 | |
| **24,062,068** | | | 29,453,280 | **29,453,280** |
| **577,231,603** | **மொத்த மூலதனமும் பொறுப்பும்** | | | **572,804,259** |

உபவேந்தர் — நிதியாளர்

பிட்டிபன வடக்கு,
ஹோமாகம
27.02.2012

# இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம்

## 2011 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமான, செலவினக் கணக்கு

| 2010<br>ரூ. | விவரம் | அட்டவணை இல. | 2011<br>ரூ. | 2011<br>ரூ. |
|---|---|---|---|---|
| | **(1) வருமானம்** | | | |
| 82,170,000 | 1. மீண்டுவருஞ் செலவினத்துக்கு அரசாங்க உதவுதொகை | | 92,318,939 | |
| 9,873,793 | 2. பல்கலைக்கழகத்தால் ஈட்டப்பட்ட வருமானம் | a | 13,379,881 | |
| 5,637,083 | 3. வெளிவாரிக் கருத்திட்டங்களால் ஈட்டப்பட்ட வருமானம் | | 6,928,175 | |
| 1,200,527 | 4. மூலதன –மீண்டுவருஞ் செலவினம் | | - | |
| **98,881,403** | | | | **112,626,995** |
| | **(2) கழிக்குக – செலவினம்** | | | |
| | 1. பல்கலைக்கழகச் செலவினம் | | | |
| 41,161,272 | நிகழ்ச்சித்திட்டம் இல. 01 | b | 52,376,203 | |
| 32,441,276 | நிகழ்ச்சித்திட்டம் இல. 02 | c | 46,283,776 | |
| 4,681,321 | நிகழ்ச்சித்திட்டம் இல. 03 | d | 6,952,769 | |
| 6,058,292 | நிகழ்ச்சித்திட்டம் இல. 04 | e | 6,120,708 | |
| 2,100,709 | நிகழ்ச்சித்திட்டம் இல. 05 | f | 2,530,028 | |
| 8,844,444 | நிகழ்ச்சித்திட்டம் இல. 06 | g | 12,566,685 | |
| 39,924,628 | 2. தேய்மானத்துக்கு ஏற்பாடு | | 40,415,387 | |
| 5,637,083 | 3. வெளிவாரிக் கருத்திட்டச் செலவினம் | | 6,928,175 | |
| 1,200,527 | 4. மூலதன மீண்டுவருஞ் செலவினம் | - | | |
| **142,049,552** | | | | **174,173,731** |
| **(43,168,149)** | வருமானத்தை விஞ்சிய செலவினம் | | | **(61,546,736)** |
| 170,232,854 | முந்திய ஆண்டிலிருந்து மு/கொ மீதி | | | (213,401,003) |
| **213,401,003** | மீதி எ/செ | | | **(274,947,739)** |

சங். உபவேந்தர்  நிதியாளர்

பிட்டிபன வடக்கு,
ஹோமாகம.
27.02.2012

# இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம்

## 2011 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கு வெளியிடப்பட்ட கணக்குகளுக்கான குறிப்பு

1. கணக்கு அறிக்கைகள் கடந்த ஆண்டில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்கவும் பொதுவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கவும் வரலாற்றுச் செலவின அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

2. கணக்குக் கூற்றுகளிலுள்ள கணக்குகள் கிட்டிய ரூபாயில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

3. களஞ்சியப் பொருட்கள் முதலில் வந்தது முதலில் போகின்ற அடிப்படையில் விலை மதிக்கப்பட்டுள்ளன.

4. ப.மா.ஆ. சுற்றறிக்கை இல. 649க்கு இணங்க நிலையான சொத்துக்கள் ஓர் எளிமையான முறைக்கிணங்கத் தேய்மானப்படுத்தப்பட்டு ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளன.

   நிலையான சொத்துக்களின் தேய்மான வீதங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| | | | |
|---|---|---|---|
| கட்டடங்கள் | 05 | நூலகப் புத்தகங்கள், சஞ்சிகைகள் | 20 |
| தளபாடம், பொருத்திகள் | 10 | மோட்டார் வாகனங்கள் | 20 |
| அலுவலக உபகரணம் | 20 | பட்டமளிப்பு மேலங்கிகள் | 20 |

5. பல்கலைக்கழகத்துக்கு ரூ. 512 மில்லியனுக்கான கட்டடத்தொகுதியொன்றின் நிருமாணப் பொறுப்பு ஒப்பந்தம் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் முழுதுமளாவிய முறைமையின்கீழ் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்துக்கு ஒப்படைக்கப் பட்டுள்ளது.

6. 2010 முதல் வெளிவாரிப் பரீட்சைகள் கிளைக்கு ஒரு புதிய கருத்திட்டமான 6.1 ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

7. 2011 முதற்கொண்டு சேவைப் படிகளுக்காக நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

நிதியாளர்
பிட்டிபன வடக்கு,
ஹோமாகம
2012.02.27

# இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம்

## காசுப்பாய்வுக் கூற்று 2011

| | 2010 | | | 2011 | | |
|---|---|---|---|---|---|---|
| நிதித் தொழிற்பாடுகள் | ரூ. | | ரூ. | ரூ. | | ரூ. |
| ஆண்டுக்கான மிகை (பற்றாக்குறை) | | | **(43,168,149)** | | | **(61,546,736)** |
| ஆண்டுக்கான சீராக்கம் காசல்லாத இனங்கள் | | | | | | |
| தேய்மானத்துக்கு ஏற்பாடு | | | **39,924,628** | | | **40,415,387** |
| மிகைப்பாட்டுக்கான ஒதுக்கம் | | | | | | **17,569,053** |
| | | | **(3,243,521)** | | | **(3,562,296)** |
| தொழிற்படு மூலதனத்தில் மாற்றங்கள் | | | | | | |
| மூலதன முற்பணங்கள் அதிகரிப்பு (குறைவு) | **7,473,170** | | | **(115,239)** | | |
| சேவை வைப்புகள் அதிகரிப்பு (குறைவு) | **-** | | | **-** | | |
| நானாவித கடன்பெற்றோர் அதிகரிப்பு (குறைவு) | | **-** | | | **-** | |
| முற்கொடுப்பனவுகள் அதிகரிப்பு (குறைவு) | **220,163** | | | **(63,265)** | | |
| அட்டுறு வட்டி அதிகரிப்பு குறைவு | | **65,205** | | | **11,695** | |
| பிணை வைப்புகள் அதிகரிப்பு (குறைவு) | **1,366** | | | **(1,429)** | | |
| வெளியீடுகளின் இருப்பு அதிகரிப்பு (குறைவு) | **-** | | | **-** | | |
| பணியாளர் கடன் முற்பணங்கள் அதிகரிப்பு (குறைவு) | | **(40,938)** | | | **77,767** | |
| களஞ்சிய இருப்பு அதிகரிப்பு (குறைவு) | **92,627** | | | **(662,510)** | | |
| வைப்புகள் அதிகரிப்பு (குறைவு) | | **234,117** | | | **(120,572)** | |
| நானாவித கடன்பெற்றோர் அதிகரிப்பு (குறைவு) | **(407,388)** | | | **(363,734)** | | |
| ஒப்பந்தங்கள்மீது நிறுத்திவைத்தது அதிகரிப்பு (குறைவு) | | **(139,401)** | | | **596,707** | |
| வெளிவாரி கல்விநெறி கருத்திட்டங்கள் அதிகரிப்பு (குறைவு) | **3,504,247** | | **11,000,436** | **5,278,811** | | **4,638,231** |
| | | **7,756,915** | | | | **1,075,935** |

| | 2010 | | 2011 | |
|---|---|---|---|---|
| முதலீட்டு நடவடிக்கைகள் | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| நிலையான சொத்துக்கள் கையேற்றல் | **35,426,043** | | **21,673,764** | |
| முதலீட்டில் பயன்படுத்தியது | **(741,467)** | | **1,165,604** | |
| மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு | **-** | | **3,527,542** | |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தியது | **-** | **34,684,576** | **(123,364)** | **26,243,546** |
| மீதி (மு/கொ) | | **26,927,661** | | **25,167,611** |

| | 2010 | | | 2011 | |
|---|---|---|---|---|---|
| | ரூ. | | ரூ. | ரூ. | ரூ. |
| மீதி (மு/வ) | | | **26,927,661** | | **25,167,611** |
| மூலதன நடவடிக்கைகள் | | | | | |
| ஒத்துதவிய மூலதனம் | | **45,799,477** | | **31,700,523** | |
| திரண்ட நிதிகள் | **1,101,712** | | | **1,506,469** | |
| மூலதனம் - நன்கொடை | **175,443** | | | **24,771** | |
| கணிப்பீட்டிலிருந்து இலாபம் | **-** | | | **240,000** | |
| மூலதன நடவடிக்கைகளிலிருந்து வருமானம் | | | **47,076,632** | | **33,471,763** |
| | | | **20,148,971** | | **8,304,152** |
| காசுக்குச் சமமானவற்றின் மீதி | | | | | |
| ஆண்டின் தொடக்கத்தில் | | | **6,980,623** | | **27,129,594** |
| ஆண்டின் முடிவில் | | | **27,129,594** | | **35,433,746** |
| காசுக்குச் சமமானவற்றின் மீதியில் அதிகரிப்பு (குறைவு) | | | **20,148,971** | | **8,304,152** |

நிதியாளர்

27.02.2011

මගේ අංකය / எனது இல / My No: சீஈ/ஈ/பீபியூ/எப்ஏ/11
මබේ අංකය / உமது இல / Your No.
දිනය / திகதி / Date: 2012 யூன் 30

வணக்கத்திற்குரிய மஹோபாத்தியாயர்,
இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகம்

**இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 74 ஆம் இலக்க இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பல்கலைக் கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று 2012 ஏப்ரல் 19 ஆம் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்டதாகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட போதிலும் தொடர்ந்து பயன்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்படும் ரூபா 3,854,820 கிரயமான தளபாடங்கள், ரூபா 837,096 தொகையான பட்டமளிப்பு அங்கிகள் ரூபா 17,894,148 தொகையான காரியாலய உபகரணங்கள் போன்ற நிலையான சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்பட்டு கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தினால் வெளிவாரி கற்கைநெறிச் செயற்திட்ட வருமானம் காலப்பகுதியின் படி இனங்காணப்பட்டு கணக்கிடப்படாமையால் பூர்த்தியாகியிருந்த பாடநெறிச் செயற்திட்டக்

கணக்குகளில் மிகையாகக் காணப்பட்ட ரூபா 15,702,486 தொகையான பணம் வருமானமாக கணக்கிடப்படுவதற்குப் பதிலாக ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பு மீளாய்வின் போது பீட காரியாலயத்தில் காணப்பட்ட ரூபா 510,376 தொகையான பிரசுர இருப்புக்கள் கைவிடப்பட்டிருந்ததுடன் ஏனைய பிரசுர இருப்புக்கள் ரூபா 271,450 ஆகக் கணக்கிடப்பட்டிருந்தன. எனினும், ரூபா 420,486 தொகையான பிரசுர இருப்பின் புத்தகப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 361,340 தொகையான வேறுபாட்டினை நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சொத்துக்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தலுக்காக பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,527,542 தொகையான மீண்டெழும் செலவினம் "மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்பாடு" போன்ற கணக்குத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்டு அச் செலவினங்கள் நடைமுறையல்லாச் சொத்துக்களாக கணக்கிடப்பட்டிருந்தன.

### 2.2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் ஒப்பந்தங்கள் மற்றும் வழங்கல்களின் அடிப்படையிலான பிடித்து வைத்தல்களின் பெறுமதி ரூபா 12,926,599 ஆனதுடன் இதில் 2 ஆண்டுகளுக்கு மேல் பழமையவாய்ந்த மீதிகளின் பெறுமதி ரூபா 11,501,967 ஆகக் காணப்பட்டது.

### 2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணம் | |
| (i) 371(2) | குறித்த பணிக்கான கட்டுநிதி அவை வழங்கப்பட்ட பணி முடிவுற்ற உடன் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் கடந்த இரு ஆண்டுகளின் போது 12 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 242,407 தொகையான முற்பணம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 756 | பல்கலைக்கழகத்தின் ரூபா 26,885,579 தொகையான தளபாடங்களும் ரூபா 36,783,169 தொகையான உபகரணங்களும் தொடர்பாக பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட மீதி உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. |
| (உ) 2010 செப்தெம்பர் 06 ஆம் திகதிய கொள்வனவுக் கைநூலுக்கான இணைப்பு 19 | ரூபா 200,000 இற்கு அதிகமான வாகனப் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக வரிசை அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய |

போதிலும் ஆண்டின் போது அவ்வாறு செய்யப்படாத 3 சந்தர்ப்பங்கள் கண்டறியப்பட்டதுடன் அவற்றின் பெறுமதி ரூபா 1,220,240 ஆகக் காணப்பட்டது.

| | | |
|---|---|---|
| (ஊ) | 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்பினைச் செலுத்துகையில் கல்விசார் படிப்பணம் கருத்திற் கொள்ளப்பட்டதன் காரணமாக 1997 ஆம் ஆண்டு முதல் 2011 ஆகஸ்ட் வரை ரூபா 4,155,912 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

**2.2.5 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

---

1984 நவம்பர் 24 ஆம் திகதிய பீஈ/1/116/6 ஆம் இலக்க திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்த கடிதத்தின் பிரகாரம், மருத்துவ உதவி நிதியத்திற்காக பல்கலைக்கழக நிதியத்தினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்பைக் குறைப்பதற்காக மருத்துவ உதவி நிதியத்தை நிலையான வைப்புக்களில் இட்டு கிடைக்கும் வட்டிவருமானத்தை சீராக்கியதன் பின்னரான மீதியை மாத்திரம் மீளளிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் முன்னைய ஆண்டுகளைப் போன்று மீளாய்வாண்டின் போதும் அவ்வாறு பெறப்பட்ட வட்டி வருமானத் தொகையான ரூபா 169,152 தொகை சீராக்கப்படாது மொத்தப் பங்களிப்புத் தொகையான ரூபா 1,512,940 தொகையும் மருத்துவ உதவி நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது மருத்துவ உதவி நிதியத்திற்கு ரூபா 169,152 கூடுதலாக செலவுவைக்கப்பட்டிருந்தது.

**2.2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய அங்கீகாரம் பெறப்படாது

வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு 2010/2011 ஆம் ஆண்டின் போது படிப்பணமாக ரூபா 534,600 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

3. **நிதிசார் மீளாய்வு**

3.1 **நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளானது மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்வதற்கு முன்னர் ரூபா 154,471,836 பற்றாக்குறையாகியதுடன் முன்னைய ஆண்டிற்கான இதனோடொத்த பற்றாக்குறை ரூபா 125,338,149 ஆகக் காணப்பட்டமையால் பற்றாக்குறையில் அதிகரிப்பு ரூபா 29,133,687 ஆகக் காணப்பட்டது. மீண்டெழும் செலவிற்காக பெறப்பட்ட ரூபா 92,318,939 அரசாங்க மானியத்தின் காரணமாக மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 62,152,897 ஆனதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 43,168,149 ஆனமையால் பற்றாக்குறையில் ரூபா 18,984,748 ஆன அதிகரிப்பு காணப்பட்டது. மீளாய்வாண்டு முதல் ஊழியர் பணிக்கொடை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையே இதற்கு முக்கியமான காரணமாகியது.

4. **செயற்பாடு மீளாய்வு**

4.1 **செயலாற்றல்**

பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டதன் முக்கிய நோக்கம் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் பௌத்த சமயத்தைப் பரப்புதல் மற்றும் தர்ம போதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பௌத்த தர்ம மற்றும் ஒழுக்கம் தொடர்பாக கல்வியியலாளர்களுக்கு பயிற்றுவித்தலாகும். மீளாய்வாண்டின் போதும் கடந்த நான்கு ஆண்டுகளின் போதும் சாதாரண பட்டப்படிப்பிற்காக உள்ளக மாணவர்களாக விண்ணப்பித்த மற்றும் சேர்த்துக்கொள்ளப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான குறிப்பு ஒன்று பின்வருமாறாகும்.

| ஆண்டு | விண்ணப்பித்த எண்ணிக்கை | | சேர்க்கப்பட்ட எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | உள்நாடு | வெளிநாடு | உள்நாடு | வெளிநாடு |
| 2007 | 348 | 42 | 102 | 42 |
| 2008 | 293 | 61 | 109 | 61 |
| 2009 | 196 | 74 | 109 | 74 |
| 2010 | 353 | 45 | 109 | 45 |
| 2011 | 305 | 48 | 110 | 48 |

## 4.2 கல்விசார் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(அ) முது மானி பட்டப் பாடநெறிக்கான காலம் 2 ஆண்டுகளான போதிலும் 1994 – 2007 வரை பதிவுசெய்துகொண்ட 22 பேரில் 5 ஆண்டுகளுக்கு மேல் காலங் கடந்து பட்டங்களைப் பெற்றிருந்த 8 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. பட்டம் பெற்றிராத 14 சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

(ஆ) முது மானி மற்றும் கலாநிதிப் பட்டத்திற்காக அறவிடப்படும் கட்டணங்கள் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. இக் காரணத்தினால் கட்டண அறவீடுகளின் சரியான தன்மையையும் மேலும் அறவிடப்பட வேண்டிய கட்டணம் குறித்தும் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

(இ) நூலகக் கட்டணமாக முது மானி மற்றும் கலாநிதிப் பட்டத்தைப் பயிலுகையில் பணம் அறவிடப்பட்ட போதிலும் நூலகப் பயன்பாட்டிற்காக திருப்திகரமான செயல்நடவடிக்கைகள் இருக்கவில்லை.

## 4.3 மாணவர் கிரயம்

---------------------------

மீளாய்வாண்டின் போது கல்வி நடவடிக்கைகளுக்காக 519 மாணவர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 174,779,892 ஆனதுடன் ` முன்னைய ஆண்டில் 544 மாணவர்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 142,049,552 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது ரூபா 336,763 தொகையான ஒரு மாணவனுக்கான கிரயத்தினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 261,120 தொகையான ஒரு மாணவனுக்கான கிரயத்துடன் ஒப்பிடப்படுகையில் 28.9% ஆல் அதிகரித்திருந்தது. இதற்கு ஒப்பாக களணி மற்றும் மொறட்டுவை பல்கலைக்கழகங்களில் ஒரு மாணவனுக்கான கிரயம் முறையே ரூபா 184,226 ஆகவும் ரூபா 218,123 ஆகவும் இருந்தன.

## 4.4 முகாமைத்துவ திறமையீனங்கள்

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளும் 2011 பாதீட்டின் மூலம் இதற்கு பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் அரசாங்க நிறுவகங்களில் நிரந்தர ஊழியர்களின் மாதாந்தம் இலாபம் ரூபா 50,000 அல்லது வருடத்திற்கு ரூபா 600,000 இற்கு மேலான தொகையைப் பெறும் ஊழியர்கள் 2011 ஆம் ஆண்டின் ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் உழைக்கும் போதே செலுத்தும் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டு வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகத்தினால் இது வரையில் இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) 45 ஆம் இலக்க 2011 ஏப்ரல் 07 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு மாறாக 2011 ஆம் ஆண்டிற்காக இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகத்தின் 25 விரிவுரையாளர்களுக்கு ஆராய்ச்சிப் படிப்பணமாக ரூபா 2,986,806 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 723 ஆம் இலக்க 1997 திசெம்பர் 12 ஆம் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் 12(ii) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உதவிப் பேராசிரியர்/பேராசிரியர் பதவி உயர்வுகள் வழங்கப்படுகையில் மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களாக உரிய .நிறுவகத்திற்கு வெளியில் இருந்து நிபுணர்களும் உரிய உத்தியோகத்தரின் பேராசிரியர் அல்லாத நபரும் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தின் பகுதிநேர விரிவுரையாளர்கள், தற்காலிக விரிவுரையாளர்கள் மற்றும் பல்கலைக்கழக நிர்வாக சபை பிரதிநிதிகள் மதிப்பீட்டுக் குழுவில் நியமிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட 5 உதவிப் பேராசிரியர் /பேராசிரியர் நியமனங்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாகவும் வெளிப்படைத்தன்மைக்கு மாறாகவும் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.5 நிதியத்தின் குறைவான பயன்பாடு

மூலதனச் செலவினத்தை மேற்கொள்வதற்காக பேணப்படும் வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 18 மில்லியன் முதல் ரூபா 40 மில்லியன் வரையான வீச்சிலான மீதி ஆண்டு முழுவதும் காணப்பட்டது. இம்மிகைப் பணத்தினை குறுங்கால வைப்புகளில் ஈடுபடுத்துவதன் மூலம் வருமானத்தை உழைத்துக் கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை

## 4.6 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 97 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 3,881 சதுர மீட்டர் நிலப்பரப்பளவான நூலகத்தில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 519 ஆக இருந்தது. நூலகத்தில் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை 39,040 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது நாளாந்தம் நூலகத்தைப் பயன்படுத்தும் மாணவர்களின் எண்ணிக்கை 14 முதல் 99 வரையான மிகக் குறைவான மட்டத்தில் நிலவியது.

(ஆ) ரூபா 28 மில்லியன் செலவில் சகல வசதிகளும் கொண்ட கேட்போர் கூடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பயன்பாடு தொடர்பான திட்டங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அவ்வாறே மீளாய்வாண்டின் போதும் பயனுள்ள செயற்பாட்டிற்கு ஈடுபடுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2004 ஆம் ஆண்டு முதல் ரூபா 512 மில்லியன் செலவில் சகல வசதிகளுடனான நவீனமயமாக்கப்பட்ட கட்டிடம் உள்ளடங்கலாக உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டிருந்த போதிலும் இதற்கு ஒப்பாக கூடுதலான மாணவர்கள் சேர்க்கப்படுவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.7 ஆராய்ச்சியின் மூலம் அறிவை விருத்தி செய்துகொள்ளல்

ஆராய்ச்சிகளை மேற்கொள்வதன் மூலம் அறிவை விருத்தி செய்து மாணவர் அணியை சமூகத்திற்கு வழங்குவது பல்கலைக்கழகத்தின் பிரதான செயற்பணியான போதிலும் மீளாய்வாண்டின் போது ஜியுன் பௌத்த ஆராய்ச்சி வெளியீட்டு நிதியம் எவ்வித ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிராததுடன் அதன் மீளாய்வாண்டின் இறுதி மீதி ரூபா 1,732,347 ஆகியது.

## 4.8 தாமதமான செயற்திட்டங்கள்

கரப்பந்தாட்ட மைதானத்தினை தயார்படுத்துவதற்காக எழுத்து மூல உடன்படிக்கை ஏற்படுத்தப்படாது 2010 யூலை 08 ஆம் திகதி அரச நிறுவகங்களுக்கு வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 241,810 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. காலதாமதமாகிய காலம் 17 மாதங்களாகும்.

## 4.9 பதவியணி நிர்வாகம்

மீளாய்வாண்டின் இறுதியில் பல்கழைலக்கழக பதவியணியின், 25 கல்விசாரா பதவியணியினரும் 07 கல்விசார் பதவியணியினருமாக 32 வெற்றிடங்கள் காணப்பட்டன.

## 5. கணக்களி தன்மையும் நல்ஆளுகையும்

---

பல்கலைக்கழகத்தின் கூட்டுத்திட்டத்தை நாளதுவரையாக்கி அதற்கு இணங்க மீளாய்வாண்டிற்காக செயற்பாட்டுத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிராததுடன் கூட்டுத்திட்டத்தில் குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்துகொள்ளும் வகையில் வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் வணக்கத்திற்குரிய மஹோபாத்தியாயரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) நூலக முகாமைத்துவம்

(இ) நிர்மாணிப்புகள்

(ஈ) பணப்பெறுமதியுள்ள ஆவணங்கள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

(உ) மனிதவள முகாமைத்துவம்

(ஊ) வெளியக செயற்திட்டங்களுக்கான கணக்கீடு

(எ) முற்பணங்களைத் தீர்த்துவைத்தல்

ஒப்பம். எச்.ஏ.எஸ் சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

Ms/v

மீரு.ஃ.யுடீ-03.ஃ.36(2011)

2013.04.02

எச். ஏ. எஸ். சமரவீர அவர்கள்,
கணக்காய்வாளர்,
கணக்காய்வாளர் திணைக்களம்,
பொல்தூவ வீதி,
பத்தரமுல்ல

**2011 டிசம்பர் 31 திகதியுடன் நிறைவடையும் இலங்கை பௌத்த பாளி பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 1971, 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் அடிப்படையிலான கணக்காய்வாளர் அறிக்கை.**

**குறிப்பிட்ட கணக்காய்வாளர் அறிக்கை 2012.11.14 ஆம் திகதி இப்பல்கலைக்கழகத்தின் 330 ஆவது நிர்வாக சபைக்கு முன்வைக்கப்பட்டது. இப்பதில்கள் தொடர்பாக கணக்கு மற்றும் முகாமைத்துவ ஆலோசனையின் அடிப்படையில் மீண்டும் 2013.03.25 ஆம் திகதி இடம்பெற்ற இல. 334 வது நிர்வாகக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட பதில்களை இதனுடன் சமர்ப்பிக்கின்றேன்.**

**1.2 நிதிக்கூற்று தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

**14. தரவகையீடு செய்த கணக்கின் கருத்து தொடர்பான அடிப்படை**

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 தரவகையீடு செய்த கருத்து**

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

**அ.** பரிசீலனைச் சபையினால் தற்போது சொத்துக்கள் தொடர்பான உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. அவை தொடர்பான அறிக்கைகள் நிர்வாக சபைக்குக் கிடைத்தவுடன், மீள்பெறுமதியிடலுக்கு உட்படுத்தப்படும் பொருட்களைக் கண்டறிந்து அதற்கான ஒரு சபையை நியமிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதன் மூலம் சொத்துக்கள் மீள்பெறுமதியிடலுக்கு உட்படுத்தப்படும் என்பதை அறியத் தருகிறேன்.

**அ.** தற்போது வெளிவாரி செயற்றிட்டங்கள் மூலமாக கிடைக்கப்பெறும் பணத்தினை செலவு செய்யும் வழிமுறைகள் தொடர்பான ஒரு அளவீடு நிதிக் குழுவிற்கு முன்வைக்கப்பட்டு அதற்கான அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வளவீடுகள் நிர்வாக சபைக்கு முன்வைக்கப்பட்டு அது ஏற்றுக்கொள்ளப்பட்டதும் பொருளாளருக்கு அறிவிக்கவும் அது தொடர்பான அனுமதியை பெற்றுக்கொள்வதற்குமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் குறித்துக்கொள்ளப்பட்டன என்பதை அறியத்தருகிறேன்.

### 2.2.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்

**அ.** இந்த மாற்றப்படாத தொகை மாற்றப்படாத தொகைக் கணக்கிற்கு மாற்றுவதற்கும் இறுதித் தொகையின் பெறுமதியை சரியாகக் காட்டுவதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அறியத் தருகிறேன்.

**ஆ.** 2012 ஆம் ஆண்டிலிருந்து இந்த முலதனமற்ற சொத்துக்களை பேணுதல் மற்றும் புதுப்பித்தல் செலவுகள், புதுப்பித்தல் செலவுக் கணக்கின் கீழ் கணக்கிலிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 2.2.3. கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்.

2012 ஆகஸ்ட் ஆகும்போது ரூபா 238,782.00 தொகை 2010 மற்றும் 2011 ஆண்டுகளில் ஒப்பந்தங்களின் அடிப்படையில் பிடித்து வைத்தல்களின் மூலம் விடுவிக்கப்பட்டுள்ளது. எனினும் இரண்டு வருடங்களுக்கும் மேலான பழைய ரூபா 11,501,967.00 தொகையினுள் ஊநுஊஉ நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பிடித்து வைத்தல்கள் 10.4 மில்லியன் ரூபாவாக உள்ளது. கட்டடங்களில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ததன் பின்னர் எதிர்வரும் காலங்களில் உரிய தொகையை அந்நிறுவனத்திற்கு செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். எஞ்சிய பிடித்து வைத்தல்கள் எதிர்வரும் காலங்களில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

### அ. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம்

1. 371(2) பிரிவு

   ஆக்காலப்பகுதியினுள் செலுத்தப்படாமல் இருந்த அனைத்து முற்பணங்களும் செலுத்தப்பட்டுள்ளன என்பதை அறியத் தருகிறேன்.

ை 756 பிரிவு

   2011 அலுவலக உபகரணங்கள் மற்றும் பொருட்கள் தொடர்பான பரிசீலணைகளை நிறைவு செய்து அது தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கைகள் மூலம் தெரிய வந்த எஞ்சிய

மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பான செயற்பாடுகளும் பொருட்களை ஒதுக்குதல் செயற்பாடுகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ஆ. 2010 செப்டம்பர் 06 ஆம் திகதி கைந்நூல் தொடர்பான 19 குறிப்பு**

வரையறைகளைக் கடந்து சென்ற வாகனப் புதுப்பித்தல் தொடர்பான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

**இ. 1994 ஜுன் 14 ஆம் திகதிய இல. 95 கொண்ட அரச வர்த்தகத் திணைக்களத்தின் சுற்றறிக்கை**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 955 இனை எமது பல்கலைக்கழகத்திற்கு உரித்தாக்கிக் கொண்டதன் பின்னர், கல்விக் கொடுப்பனவுகளை அடிப்படையாகக் கொண்டு ஊழியர் சேமலாபக் கொடுப்பனவுகளை கழித்துக் கொள்ளும் செயற்பாட்டினை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதுவரையில் அதற்கு முன்னர் செலுத்தப்பட்டிருந்த கல்விக் கொடுப்பனவுக்கு உரிய ஊழியர் சேமலாபத்தினை குறிப்பிட்ட அலுவலர்களிடமிருந்து அறவிடுவதற்கு எதிர்வரும் காலங்களில் நிர்வாக சபையை அறிவுறுத்தி அதன் தீர்மானத்தின் அடிப்படையில் இத்தொகைகளை அறவிடுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்பதனை மேலும் அறியத்தருகிறேன்.

### 2.2.5. போதுமான அளவு அதிகார பலத்தினால் உறுதிசெய்யப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்.

குறிப்பிட்ட முதலீட்டு வருமானங்கள் இல. 128948 மூலம் பல்கலைக்கழக கணக்கிற்கு வரவிடப்பட்டுள்ளன.

### 2.2.6 முறையற்ற கொடுக்கல வாங்கல்கள்

இப்பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டப்படிப்புக்கள் மற்றும் பட்டப்பின் படிப்புக்கள் பிரிவுகளுள் வெளிவாரி பரீட்சைகள் பிரிவு, பட்டப்பின் படிப்பு பீடத்தில் செயற்பாடுகளை மேற்கொள்ளப்படுகிறது.

வெளிவாரி பரீட்சைகள் பிரிவின் மூலம் 14 பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன. 7432 மாணவர்கள் இதற்காக பதிவுசெய்யப்பட்டுள்ளனர். அவ்வகையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு மாணவர்களை பதிவு செய்தல் தொடக்கம் பாடநெறிகளை நடாத்துதல், பயிற்சிப் பட்டறைகள் நடாத்துதல், பரீட்சைகளை நடாத்துதல், பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடல் போன்ற அனைத்துச் செயற்பாடுகளும் ஒரு பிரிவின் மூலமாகவே மேற்கொள்ளப்படுகிறது. வெளிவாரிப் பீட்சைப் பிரிவின் அலுவலர்களின் கொடுப்பனவுகள் அளவீடுகளுக்கு ஏற்ப வழங்குதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 3 நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களும் முழுமையான தகைமைகளுடன் காணப்படாததால் தகைமைகளுடன் கூடிய மாணவர்களுள் ண பெறுமானத்தின் அடிப்படையில் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இவ்வகையில் 110 உள்நாட்டு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்காகவே உயர் கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. இணைத்துக்கொள்ளப்படும் 110 மாணவர்களுக்கும் அவர்களது கல்விணாண்டு முழுவதிலும் இலங்கை பௌத்த பாளி பல்கலைக்கழகத்தின் 1995 இல 37 கொண்ட சட்டத்தின் அடிப்படையில் விடுதி வசதிகள் வழங்கப்படும்.

### 4.2 கல்விச் செயலாற்றல்

**அ**. கூடுமானவரை குறிப்பிட்ட காலப்பகுதியினுள் பட்டப்படிப்பை நிறைவு செய்தற்கும் அவை பயன் மிக்க வகையில் ஒரு தரக்கட்டுப்பாட்டின் கீழ் மேற்கொள்வதற்குமான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆ**. தற்போது இச்செயற்பாடுகள் ஒழுங்குற செய்தற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**இ**. வெளிவாரி பரீட்சைகள் பிரிவின் நூலகப் பாவனையை மேற்கொள்ளும் மாணவர்களது எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 4.3 மாணவர் செலவினங்கள்

அண்மைக் காலங்களில் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான பராமரிப்புச் செலவுகளுக்காக கூடுதலான செலவினங்கள் ஏற்பட்ட காரணத்தினால் மாணவர் ஒருவருக்கான கிரயம் அதிகரித்துள்ளது.

### 4.4 முகாமைத்துவ திறமையீனங்கள்

**அ**. செலுத்தப்பட வேண்டிய வரித் தொகைகள் எதிர்வரும் காலங்களில் கணக்கிடப்பட்டு வருமானவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**ஆ** சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதுவரை ஒப்படைக்கப்பட்டுள்ள ஆய்வு சுருக்கங்களது கிடைக்கப்பெறாத ஆய்வு அறிக்கைகளை வழங்குதற்கு குறிப்பிட்ட விரிவுரையாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், அவை ஆய்வு சபைகளுக்கு அனுப்பப்பட்டு அவற்றிற்கான மேற்பார்வைகளைப் பெற்றுக்கொண்டு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

**இ**. இத்தகைய நிலைமைகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 4.5 நிதியக் குறைபாடுகள்

சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

### 4.6 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களால் நூலகத்தைப் பயன்படுத்தும் மாணவர் எண்ணிக்கை ஒருசில சந்தர்ப்பங்களில் குறைறவடைந்துள்ளது.

- பல்வேறு ஒழுக்கச் செயற்பாடுகளை மீறியதன் காரணமாக 2011.11.08 ஆம் திகதி கொண்ட கடிதத்திற்கு ஏற்ப தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை 29 ஆகும்.
- ஒருசில மாதங்கள் விடுமுறைக் காலங்களாக இருந்ததால் மாணவர்கள் அக்காலப்பகுதியினுள் பல்கலைக்கழகத்திற்கு சமுகமளிக்காமை. உதா:
    - மே மாத வெசாக் விடுமுறை – 2011.05.22 ஆம் திகதி வரை.
    - அரையாண்டுப் பரீட்சை நிறைவடைந்ததன் பின்னரான விடுமுறை – 2011.07.09 ஆம் திகதி தொடக்கம் 2011.07.24 ஆம் திகதி வரை.

இந்நிலைமைகளை குறைத்துக்கொள்ளும் பொருட்டு தற்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- நூலகத்தைப் பயன்படுத்துதல் குறைவடைந்தமை தொடர்பாக நூலகச் சபைக் கூட்டத்தில் அனைத்து துறைத் தலைவர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

- ஒரு சிறந்த வாசிப்புச் சூழலை ஏற்படுத்தி வாசிப்புச் சேவையினை வழங்குவதற்காக அவ்வப்போது நூலக உள்ளக அலுவலர் கூட்டங்களில் அவ்வலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**ஆ** பல்கலைக்கழக மாணவர்களது பிரதான விழாக்கள் (சாகித்திய விழாக்கள் உட்பட கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களது நிகழ்ச்சிகளுக்காக இக்கட்டடம் பயன்படுத்தப்படுகிறது. எதிர்வரும் காலங்களில் மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் உள்வாரி மற்றும் வெளிவாரி பட்டமளிப்பு விழாக்கள் நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தவிரவும் பௌத்த தர்மம் மற்றும் பாளி டிப்ளோமா சான்றிதழ் விழாக்களும் நடாத்தப்பட்டுள்ளன.

**இ**. புல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் இருக்கவில்லை. அவற்றை அபிவிருத்தி செய்வது அவசியமான வேண்டுகோள். எடுத்துக்காட்டாக விரிவுரையாளர்களுக்கு தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வசதிகள் காணப்படவில்லை. அதற்கேற் வகையில் அனைத்து வசதிகளும் கொண்டதான கட்டடங்கள் மற்றும் அடிப்படை வசதிகன் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் காலங்களில் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 4.7 ஆய்வுகள் மூலம் அறிவை வளர்த்தல்

சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு ஆய்வுச் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தி புதியதொரு அறிவினை சமூகத்திற்கு வழங்கக் கூடிய வகையில் இப்புலமைப்பரிசில் திட்டம் தொடர்பான ஒரு விளம்பரப்படுத்தலினை வுழங்குவதற்கு பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது.

## 4.8 காலதாமதமான திட்டங்கள்

கரப்பந்தாட்ட மைதானத்தை அமைக்கும் செயற்பாடுகள் க்ரியாயோக்ய அமைப்பின் கீழ் பல்கலைக்கழகத்தின் ஏனைய திட்டங்களை மேற்கொள்ளும் பொறியியல் அலுவல்கள் தொடர்பாக மத்திய ஆலோசனை அலுவல்களிடத்திலேயே 2010.'.03 சிறு ஏற்பாட்டாளர்களின் தீர்மானத்திற்கு ஏற்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவ்வகையில் 2010.07.28 ஆம் திகதி வேலைகளை ஆரம்பிப்தற்கான முற்பணமாக ரூபா. 241,810.24 தொகை பொறியியல் அலுவல்கள் தொடர்பான மத்திய ஆலோசனை அலுவல்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்நிறுவனத்தின் மூலம் மைதான வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மைதானத்திற்கு அண்மையில் அமைந்துள்ள

